... PUBLIC LIBRARY
... MAY 1955
1-52

கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி

மாதப் பத்திரிகை — விலை 4 அணா

தறி 3 | கோவை, 15—2—1952. | பாவு 4

சந்தா விகிதம்

ஆண்டு சந்தா ரு. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

"கைத்தறி" காரியாலயம்,
முத்தண்ணன் தளம் வீதி,
கோவை.

திருச்செங்கோடு கூட்டுறவு கைத்தறி
நெசவாளர் காலனி அஸ்திவாரக் கல்நாட்டு விழா!

திருவாளர்கள்: கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார், (மேற்படி சொஸைட்டியின் தலைவர்) டாக்டர் பி. சுப்பராயன் எம். ஏ. பாரட்லா, (விழாத் தலைவர்) சென்னை ராஜ்ய கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்திரார் ஜே ஸி. ரயான், எம். ஏ. (அஸ்திவாரக் கல்நாட்டியவர்) ஸ்ரீமதி ரயான் திருநாவுக்கரசு முதலியார்; (ரீஜனல் மார்க்கெட்டிங் ஆபீசர்) மற்றும் பல முக்கி... விழாவில் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

45 லட்சம் ரூபாய் செலவில் தமிழ் நாட்டிலும் ஒரு கூட்டுறவு நூல் நூற்பு மில் ஸ்தாபிக்கப்படும்!

திருச்செங்கோடு நெசவாளர் கூட்டுறவு காலனி அஸ்திவாரக் கல் நாட்டு விழாவில்

ஸ்ரீ ரயான் அறிவிப்பு.

சென்ற 31—1—52-ந் தேதி காலை 10-30 மணிக்கு திருச்செங்கோடு கூட்டுறவு நெசவாளர் சங்கக் காலனிக்கு அஸ்திவாரக் கல் நாட்டு விழா வெகு விமரிசையாக நடந்தேறியது. விழாவிற்கு வெளியூரிலிருந்து பல கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளும், மற்றும் பல கூட்டுறவாளர்களும் விஜயம் செய்திருந்தனர்.

விழாவிற்கு இந்தோனேஷியாவில் நமது இந்திய யூனியனின் தூதராக இருந்த டாக்டர் பி. சுப்பராயன் எம். ஏ. பாரட்லா, அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சங்கத்தின் தலைவர் ஸ்ரீ கே. ஏ. காசி விஸ்வநாத முதலியார் அவர்கள் விழாவிற்கு வந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமது தலைமையுரையில் கூட்டுறவு இயக்கத்தால் நெசவாளர்கள் அடையும் நன்மைகளைப் பற்றியும், நெசவாளர் காலனிகளின் அவசியத்தைப் பற்றியும், அதற்காக சர்க்கார் செய்து வரும் சகாயங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர்.

பின்பு சென்னை மாகாண கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்திரார் ஸ்ரீ ஜே. வி. ரயான் எம். ஏ. அவர்கள் காலனி அமைப்புக்கான அஸ்திவாரக்கல் நாட்டினர். அவர் தமது உரையில், இவ்வித காலனிகள் நெசவாளர்களுக்குக் குடியிருக்க வீட்டுவசதிக்காகமட்டுமல்லாமல், முக்கியமாக நெசவுத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனேயே ஏற்படுத்தப்பட்டு வருவதாகக் கூறினர். மேலும் நமது நெசவாளர் சங்கங்களுக்குப் போதிய நூல்கள் கிடைப்பதற்காக கூட்டுறவு மில் ஒன்று குண்டக்கல்லில் ஸ்தாபிதம் செய்யப்பட்டு வருகிறதென்றும், மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்குத் தற்போது மாதம் ஒன்றுக்கு சுமார் 7,000 பேல்கள் நூல் தேவையென்றும், ஆனல் குண்டக்கல்லில் ஏற்படுத்தப்படும் மில்லில் சுமார் 700 பேல்கள் தான் உற்பத்தி செய்ய முடியுமென்றும் குறிப்பிட்டார். தவிரவும் நூல் பற்றாக்குறையைப் போக்க தமிழ் நாட்டிலேயும் ரூ. 45 லக்ஷம் செலவில் மற்றொரு கூட்டுறவு நூல் மில் ஒன்று ஸ்தாபிக்க முயற்சிகள் நடந்து வருவதாகவும் ஸ்ரீ ரயான் அவர்கள் கூறினர்

பின்னர் பிரபல தலைவர்களிடமிருந்தும், முக்கிய கூட்டுறவாளர்களிடமிருந்தும், மற்றும் பல பிரமுகர்களிடமிருந்தும் வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. தலைவரின் முடிவுரைக்குப் பின் சங்கத்தின் சார்பாக ஸ்ரீ எஸ். பச்சையண்ண முதலியார் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறினர். பிறகு எல்லோருக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டது.

காலனிபற்றிய சில குறிப்புகள்

இந்தக் காலனியில் 141 வீடுகள் கட்டுவதற்காக 27.70 ஏகர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கிணறு ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது. சர்க்கார் இக்காலனிக்காக 22—4-48 தேதிய G. O. No. 2022-ன்படி ரூ 90,000/- கடன் சாங்க்ஷன் செய்துள்ளனர். இதில் 10—4—51 தேதியில் ரூ. 25,000/- காலனி நிலத்தில் நடந்துவரும் வேலைகளுக்காக வாங்கப்பட்டுள்ளது மேலும் காலனியில் சம்பந்தப்பட்ட மெம்பர்களிடமிருந்து ரூ. 22,030—2—9 டெபாசிட்டாக நாளது தேதி வரையில் வாங்கப்பட்டுள்ளது. தற்சமயம் 50 வீடுகள் கட்டுவதற்காகத் துரிதமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன வீடுகள் கட்டுவதற்காகத் தேவையான சாமான்கள் நாளது வரை ரூ. 34,087 5—6-க்கு வாங்கப்பட்டுள்ளன. இந்தக் காலனியில் பொது ஆஸ்பத்திரி ஒன்றும், பள்ளிக்கூடம் ஒன்றும், பொது வாசகசாலை ஒன்றும், சிங்காரத் தோட்டம் ஒன்றும் ஏற்படுத்துவதற்காக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (ந—ரி)

வரப்பெற்றோம்.

'கூட்டுறவு தொண்டு'

ஆசிரியர் :

கே. ஸ்ரீனிவாசன் எம். ஏ.,

தனிப் பிரதி அணா 3.

தஞ்சாவூர்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சிப்பந்திகள் சங்கத்தாரால் நடத்தப்படும் சஞ்சிகை. இதில் கூட்டுறவு இயக்க செய்திகளும், கட்டுரைகளும் இடம்பெற்று பெயருக்கேற்ப காட்சியளிக்கிறது. மேலும், கூட்டுறவுச் சிப்பந்திகளின் தேவைகளை அறிவிக்கவும், உரிமைகளை அடையவும் ஆன செய்திகளும், இடம் பெற்றுள்ளன.

—ஆசிரியர்.

'கவனிக்கப்படும்'

என்ற இந்த வார்த்தை, மக்களின் தேவைமீது பிறக்கிற போருணர்ச்சியை மக்கடிக்கப் பலருக்கு உதவியாக நின்று வருவதை அனுபவத்தில் நாம் பார்த்து வருகிறோம்.

"கவனிக்கிறோம்" என்கிற வார்த்தையை கீழிருந்து மேலதிகாரிகள் வரை—ஏன்; மந்திரிகள் வரைகூட சொல்லக் கேட்டு நெசவாளர்களுக்கு காதுகூடப் புளித்துப்போய்விட்டது என நிச்சயமாகச் சொல்லலாம்.

"ஐயா. எங்கள் ஊருக்கு நூல் அலாட்மெண்ட் கி[illegible] மாதங்கள் மூன்றாகிவிட்டன. நாங்கள் பட்டினி கிடக்கிறோம். எங்கள் குழந்தைகள் எல்லாரும் எலும்பும் தோலுமாகக் காட்சியளிப்பதைப் பாருங்கள். புளியங்கொட்டைதான் எங்களது இன்றைய உணவாகப் போய்விட்டது. உடனடியாக எங்களுக்கு நூல் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்" என ஏழைக் கைத்தறிக்காரர்கள், சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளையோ, சர்க்காரில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களையோ கண்டு விண்ணப்பங்கள் கொடுத்துக் கேட்டால், விண்ணப்பங்களை வாங்கி வைத்துக்கொண்டு "கவனிக்கிறோம்" என்று ரத்தினச் சுருக்கமாகப் பதில் சொல்லி தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

இம்மாதிரி இந்த ராஜ்யக் கைத்தறி நெசவாளர்களுக்குக் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கிடைத்துள்ள வார்த்தை சமாதானங்களை புள்ளிவிவரக் கணக்குக்கூட எடுக்க முடியாது. ஏனெனில்; அவ்வளவு ஆயிரம் தடவைகள் தலைப்பில் கண்டுள்ளபடி சமாதானங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

இதேபோன்று பல பகுதியினருக்கும் நடைமுறையில் எத்தனையோ சமயங்களில் மேற்கண்ட முறைகளிலேயேதான் பதில்கள் கிடைத்திருக்கின்றன.

சமீபத்தில் சென்னை ராஜ்ய சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் மாகாண சங்கத் தலைவர்கள் சிலர் சென்னையில் மந்திரிகளையும், அதிகாரிகளையும் கண்டு தங்கள் தொழிலுக்குள்ள சீர்கேட்டை எடுத்துக்காட்டி, வளர்ச்சியடையவேண்டிய — அதற்காக சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டு முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய —குடிசைத் தொழிலான சாய, அச்சுத் தொழில்களுக்கு விற்பனை வரியைப்போட்டு அதைச் சாகடிக்க முயற்சிக்கும் உத்திரவுகளை ரத்து செய்து வரியிலிருந்து விலக்களிக்கும்படி கோரிய போதுங்கூட "கவனிப்பதாக" பதில் கூறி அனுப்பியுள்ளார்கள்.

இதே பிரச்னையின்மீது சென்ற இரண்டு ஆண்டுகளாக யாரால் மேற்கண்ட முறையில் பதில் கூறப்பட்டதோ, அவர்களே-இரண்டாண்டுகளாக எள்ளத்தனையும் இதைப்பற்றி எவ்வித மாறுதலும் செய்ய விரும்பாதவர்களே தான் மீண்டும் இதே பதிலைக் கூறுகிறார்கள்.

இப்படிப் பதில் சொல்லுவது அவர்களுக்கு சகஜமாகிப்போய் விட்டதால்தான் அதைப்பற்றிக் கொஞ்சமும் வெட்கப்படாமலேயே மேற்கண்டபடி பேட்டி காண்பவர்களுக்கு - குறைகளை எடுத்துக்காட்டிப் பரிகாரம் கோருபவர்களுக்கு பதில் சொல்லுகிறார்கள் போலும்! முடியும் அல்லது முடியாது எனப் பதில் சொன்னால் இவர்களின் வாய் முத்து உதிர்ந்துவிடும் போலிருக்கிறது!

இந்த பதில்கள் மக்களின்—தொழில் செய்வோரின் — அன்றாடப் பிரச்னைகளின்மீது கூறுகிற அதே நேரத்தில்—அவைகளை நிறைவேற்றிக்கொடுக்க—குறைகளைத் தீர்க்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல், பல்வேறு தவறான வழிகளில் தங்களுக்கு வேண்டியவர்களுக்குமட்டும் காரியங்கள் சித்தியாக்கித் தருவதில் சம்பந்தப்பட்டவர்கள் குறி தவறுவதேயில்லையெனப் புகார்கள் பலராலும் சொல்லப்படுகின்றன.

அப்படிப்பட்ட புகார்கள் உண்மைதான் என்பதற்கு சென்னை சட்டசபையில் ஸ்ரீ பிரகாசம் அவர்கள் அமைச்சர்கள் மீது சுமத்திய குற்றப் பட்டியலே குறிப்பிடத் தக்கதாக இருக்கிறது.

தெரிந்த இதுபோன்ற புகார்களைப்பற்றி நியாய உணர்ச்சியோடு யாராவது கண்டிக்க முன்வந்தால், "தேன் எடுத்தவன் ருசிபார்க்காமலா சார் இருப்பான்" என்று தீச்செயலுக்கும் நியாயம் கற்பிக்க முன்வரும் பெரிய மனது படைத்தவர்களும் நம் மத்தியில் இல்லாமலில்லை.

ராஜ்யத்திலுள்ள 8 லட்சம் கைத்தறிக்காரர்களும் தங்களது தொழிலுக்கு வேண்டிய நூல் கிடைக்காது திண்டாடுகிறார்களே, அப்படியிருக்க, விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சிலருக்கு மட்டும் பேல் கணக்கில் ஏனய்யா **கன்ஸியூமர் கோட்டா** என்ற முறையில்

நூல் பேல்களைத் தூக்கிக் கொடுக்கிறீர்கள்? இது நியாயம்தானா எனக் கேட்டால்; என்ன 288 பேல்கள்தானே-ஒரு சிறிய அளவுதானே அப்படிக் கொடுக்கிறோம். அதுவும் அவர்கள் பரம்பரையாகவே தொழில் செய்கிறார்கள். அவர்களுக்கு எப்படி இல்லையென்பது? இதுபற்றி நீங்கள் பேசிப் பயன் இல்லை. வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள் என நெசவுத் தொழிலைப் பற்றியே அறியாத — அதைப்பற்றிய மாகாணத்தின் முக்ய அதிகாரி பதில் கூறுகிறாராம்!

கன்ஸியூமர் நூல் கோட்டா பெறுபவர்கள்தான் பரம்பரையாக கைத்தறி நெசவுத் தொழில் செய்தார்களா? இம் மாகாணத்தில் உள்ள 8 லட்சம் நெசவாளர்களும் பரம்பரை நெசவாளர்கள் அல்லாமல் வேறு என்ன என்று நினைக்கிறீர்கள் என்று மடக்கிக் கேள்வி கேட்டால், எனக்கு எவ்வளவோ வேலையிருக்கிறது; இதைப்பற்றி மேற்கொண்டும் விவாதிக்க நேரமில்லை யென சவுகரியக்காரக் கூட்டத்திற்கு—சலுகை பெறும் வர்க்கத்திற்கு வக்காலத்து வாங்கப்படுகிறது. பிரச்னையிலிருந்து நழுவி ஓடப்படுகிறது.

மாகாணத்தின் முக்ய அதிகாரி சொல்லுகிற புள்ளி விவரமாவது உண்மையானதாக—ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருக்கிறதா என்னில் அதுவுமில்லை. கன்ஸியூமர் நூல் கோட்டாவுக்கு 288 பேல்கள் தான் கொடுக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால் சர்க்காரின் பத்திரிகை குறிப்புகளோ அதற்கு மாறாக இருக்கிறது. சென்னை சர்க்காரின் செய்தி விளம்பர இலாகா வெளியிட்டுள்ள நூல் அலாட்மெண்ட் சம்பந்தமான பத்திரிகைக் குறிப்பில், கன்ஸியூமர் கோட்டாக்காரர்களுக்கு 2391 பேல்கள் (ஒரு மாதத்திற்கு) கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட 2100 பேல்கள் வித்தியாசம் இருப்பதை சொல்லுக்கும், செயலுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை மேற்படி சர்க்காரின் இரண்டு வெவ்வேறு இலாகாக்களிடமிருந்து அறியக் கிடைக்கிறது. யாரை யார் எப்படிக் கவனிக்கிறார்கள் என்பதற்கு இந்த எடுத்துக்காட்டே போதுமானது. இதற்குக் காரணம் எந்த அதிகாரியும் அல்ல; அடிப்படைக் கொள்கைதான் இவ்வளவு முரண்களுக்கும் ஆணிவேர் என்பதை நாம் உணர்வோம்.

சென்னை உயர்நீதி மன்றம் கூட ஒரு நூல் வினியோக வழக்கில் தீர்ப்புக் கூறவேண்டி ஏற்பட்டது. சர்க்காரின் டெக்ஸ்டைல் கொள்கையை விமர்சிக்கையில் "**ஒருதலைப்பட்சமான இன்றைய நூல்வினியோக முறையை சர்க்கார் மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும், பொதுக் கொள்கை யொன்று வகுத்து அதன்படி எல்லோருக்கும் சமநீதி வழங்க மத்திய சர்க்கார் முன்வருவதுதான் நல்லது**" என்றும் கூறியுள்ளது.

"கவனிக்கிறோம்" என்கிற வார்த்தை எந்த அளவுக்கு பல லட்சம் கைத்தறியாளர்களைப் பட்டினி போட்டு, ஒரு சிலரை போக போக்கியர்களாக்கியுள்ளது என்பதைத்தான் சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகள். **ஒருதலைப்பட்சமான இன்றைய நூல் வினியோக முறை** என சூசகமாக எடுத்து இடித்துக் காட்டியுள்ளனர். நல்ல மாட்டுக்கு ஒரு சூடுதானே!

இந்தத் தீர்ப்புக் கிடைத்தும் கூட மாதங்கள் 6 ஆகிவிட்டன. இன்றையவரை எவ்விதமான மாறுதலும் ஏற்பட்டதாக நடைமுறைகள் நிரூபிக்கவில்லை. இன்னும் நூல் வினியோகம் பழைய கருப்பன் கருப்பனே தான் என்ற முறையிலேயே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. எல்லோருக்கும் சம நீதியும், சம சந்தர்ப்பமும் வழங்கப்படும் முறையில் ஒரு பொது டெக்ஸ்டைல் கொள்கை வகுக்கப்படவுமில்லை. அப்படி ஏதாவது உருவாக்கும் உத்தேசம் இருப்பதாகக்கூட தெரியவில்லை.

எனவே, 'கவனிக்கிறோம்' என்கிற வார்த்தை அதை உபயோகிப்பவர்களுக்குக் கற்கண்டாக இருக்கலாமே தவிர, கைத்தறிக்காரர்களைப் பொறுத்த மட்டில் அது கசக்கும் வேப்புதான் என்பதை எடுத்துக்காட்டி, வெறும் வார்த்தைச் சமாதானங்களை விடுத்து காரியத்தில் கைத்தறிக்காரர்களுக்கு நல்லது செய்ய சர்க்காரும் மற்றவர்களும் முனையவேண்டுமென ஆசைப்படுகின்றோம்.

சென்னிமலை நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
சென்னிமலை P. O.

—:o:—

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால தயார்செய்த 5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L.
தலைவர்.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க பிஸினெஸ் மானேஜர் அவர்கள், இக்கட்டுரையில் கைத்தறி நெசவுத் தொழிலின் எதிர்காலம் செழிப்படைய என்ன செய்ய வேண்டுமென்பதை வெகு விளக்கமாக எடுத்துக்காட்டுகிறார்.

கூட்டுறவு நெசவு முறையின் வளர்ச்சியும் அதன் எதிர்கால முயற்சியும்

W. ஞானசம்பந்தம் B. A.,

நம் நாட்டில் ஒரு கோடி மக்களுக்குமேல் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். சென்னை ராஜ்யத்தில் மட்டும் இருபது லட்சம்பேர் நெசவாளர் குடும்பங்களில் நெய்தொழிலையே செய்தொழிலாக நம்பி வாழ்கின்றனர். 1945-ம் வருஷத்திய புள்ளிவிபரக் கணக்கு கமிட்டியாரின் அறிக்கைப்படி, சென்னை ராஜ்யத்தில் மொத்தம் 4.95,943 கைத்தறிகள் இருக்கின்றன. இவைகளின் நூல் தேவையில் 26.05 சதமானம் நூல் சர்க்காரின் பொது சேகரிப்புத் திட்டத்திலிருந்து அவர்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. கைத்தறி நெசவுத் தொழிலில் நம் ராஜ்யம் ஒரு முக்கிய ஸ்தானம் வகித்து வருகிறது. மில்களின் கடுமையான போட்டியிலிருந்துங்கூட, இந்தத்தொழிலானது தலையெடுக்க ஆரம்பித்ததற்கு, பொதுஜனங்களின் தேவைக்கேற்ப நல்ல வேலைப்பாடுகளுடன் சரக்குகள் தயார் செய்யக்கூடிய ஆற்றல் நமது நெசவாளிகளுக்கு இருந்துவருவதுதான் முக்கிய காரணமாகும்.

நம் ராஜ்யத்திலுள்ள நெசவு ஆலைகள் நமக்கு வேண்டிய துணிமணிகளைத் தயாரிப்பதில்லை. பம்பாய், ஆமதாபாத் போன்ற ராஜ்ய மில்களிலிருந்து நமக்கு துணி அலாட்மெண்ட் செய்யப்படுகிறது. நடுத்தரவகுப்பார், தொழிலாளிகள் இவர்களது தேவையில் பெரும்பகுதி துணியானது கைத்தறி நெசவுமூலமா ஈடு செய்யப்படுகிறது. கைத்தறி நெசவுத் துணியை உபயோகப்படுத்திப் பழக்கப்பட்டவர்கள், விசேஷசமயங்களுக்கு அவைகள் அன்னியில் வேறு துணிகள் உபயோகிக்கமாட்டார்கள். தவிரவும், வர்ண வேலைப்பாடுகளுடன் கூடிய நவீன நாகரீகமான கைநெசவுப் புடவை ரசங்களுக்கு நம் நாட்டுப் பெண்மணிகளிடையே நிரந்தரமான ஒரு கிராக்கி எப்போதுமே இருந்துவருகிறது. கதர் கண்ட்ரோல் உத்தரவு மூலம் சர்க்காரால் ஆதரித்துக் காக்கப்பட்டு வரும் கதர் உற்பத்தி ஒரு சிறிய அளவில் நமக்குக் கிடைத்துவருகிறது. ஆகையால் இந்த ராஜ்யத்தின் துணி உபயோகத்தில், கதர் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படுவதற்கில்லை.

மூவகைப் பிரிவினர்

நம் ராஜ்ய நெசவாளர்களை மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம். தன் சொந்த மூலதனத்தைக்கொண்டு தனது நூல் தேவைகளை சமாளித்துக்கொண்டு உற்பத்தித் துணிகளை உள்ளூர் சந்தைகளிலும் மார்க்கெட்டிலும் விற்று வருபவரான சொந்த நெசவாளிகள் முதல் பிரிவினராவர். ஒரு முதலாளியின்கீழ், அவரால் கொடுக்கப்படும் நூலை கூலிக்கு நெய்து துணியை அவருக்கே ஒப்படைக்கும் கூலிக்கு வேலை செய்யும் நெசவாளர்கள் இரண்டாவதுவகையினரவார். மேற்படி முதலாளியால் இவர்கள் கட்டுப்படுத்தப்பட்டு அவரின் ஆதிக்கத்தின்கீழ் எப்போதுமே இருந்துவருகிறார்கள். உற்பத்தி செய்யும் நெசவாளிக்கும், உபயோகிக்கும் பொதுமக்களுக்கும் மத்தியில் இம்முதலாளிகள் தரகர்கள் ஸ்தானத்தில் இருந்துகொண்டு நல்ல லாபம் சம்பாதித்து வருவது கண்கூடு. நமது கூட்டுறவு நெசவு சங்கங்களில் சேர்ந்துள்ள மெம்பர்களை மூன்றாவது பிரிவினராகச் சொல்லலாம். முக்கியமான நெசவுப் பிரதேசங்களிலெல்லாம் கூட்டுறவு நெசவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவைகளில் சேர்ந்துள்ள நெசவாளிகள் இச்சங்கங்கள் மூலம் நூலைப் பெற்று சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளில் துணிகள் நெய்து அவைகளை சங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கூலியைப் பெற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு தயாரிக்கப்பட்ட துணிகளை சங்கங்கள் தாங்களாகவே விற்பனை செய்ய ஏற்பாடு செய்கின்றன. நம் சென்னை ராஜ்யத்தில் நாளது தேதியில் 989 கிராமங்களிலும் நகரங்களிலுமாக 1,90,415 தறிகள் கூட்டுறவு நெசவு சங்கங்களில் சேர்ந்துள்ளன. இந்த ராஜ்யத்திலுள்ள மொத்த தறிகளில், இக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ள தறிகள் மூன்றில் ஒரு பகுதியினதாகும்.

விசைத்தறி நெசவு பாக்டரிகள்

மேற்கூறிய நெசவாளர்களைத் தவிர, நம் ராஜ்யத்தின் சில முக்கிய பகுதிகளில் துணி நெசவு

பாக்டரிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள விசைத்தறிகளில் சில தொழிலாளிகள் ஈடுபட்டுப் பாடுபட்டு வருகிறார்கள். இவர்களால் சில விசேஷ ரக துணிகள் தயார் செய்யப்படுகின்றன. பாக்டரிகள் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுள்ள இந்த நெசவுச்சாலைகளில் உள்ள தொழிலாளிகளுக்கு வேலை செய்யும் நாட்களுக்கு தினம் ஒன்றுக்கு ரூ. 2/- வீதம் குறைந்தபட்சக் கூலி கிடைக்கிறது. சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தாலும் இம்மாதிரி ஒருசில நெசவுச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விசேஷ ரக துணி வகைகள் தயாரிப்பதில் நெசவாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகவே இவைகள் தோற்றுவிக்கப்பட்டன.

சில முக்கிய பிரச்னைகள்

நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர் பெருமக்கள் பல பிரச்னைகளை சமாளிக்கவேண்டியிருக்கிறது. அவற்றில் முக்கியமானது வேலைக்குத் தேவையான நூல் கிடைப்பதுபற்றியாகும். நூலோ கிடைப்பதில்லை. நூல் வாங்க முதல் வேண்டும். நெய்த சரக்கை விற்பனை செய்வதில் உள்ள கஷ்டங்கள் பல. இவைகளை நம் நெசவாளிகள் சமாளிக்க வேண்டியிருக்கிறது. நம் ராஜ்ய கைத்தறிகள் மில்களில் தயாராகும் நூலையே நம்பி வாழ வேண்டியதாய் இருக்கிறது. நம் கைத்தறிகளுக்குத் தேவையான நூல் ரகங்களைத் தயாரிக்க மில்கள் அதிகம் முன்வருவதில்லை. முன்பு நூலை இஷ்டப்படி விற்க அனுமதியிருந்தது. ஆனால், நூல் உற்பத்தி, விநியோகம், விலை இவைபற்றி கண்ட்ரோலும் கட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்ட பின்பு நெசவாளியானவர், அவர் எந்த விற்பனையாளரிடம் இணைக்கப்பட்டுள்ளாரோ அவரால் கொடுக்கப்படும் ரக நூல்களையே குறிப்பிட்ட விலை கொடுத்து, எவ்வளவு கிடைக்கிறதோ, அவ்வளவுதான் வாங்கிக்கொள்ள வேண்டியவராகிறார். நம் ராஜ்ய நெசவாளிகளின் தேவை அனைத்தையும் சரிக்கட்டக்கூடிய பலரக நூல்கள் நம் மில்களில் தயாரிக்கப்பட்டும் அவர்கள் நிலைமை இவ்விதமாய் இருந்துவருகிறது. கைத்தறி நெசவுத் துணிகளின் தரம் அபிவிருத்தியடையாததற்கு இது ஒரு காரணமாகும். நூல் கட்டுப்பாடானது, நூல் தட்டுப்பாடாயிருக்கும்போது, தீவிரமாய் அமுலாக்கப்படுவது கண்கூடு. நூல் தேக்கமேற்பட்டால் இது தளர்த்தப்படும். பலவித காரணங்களால் நூல் தட்டுப்பாடு ஏற்படுகிறது. துணிக்கு நாட்டில் ஏற்படும்கிராக்கியும் சர்க்காரின் ஏற்றுமதிக் கொள்கையும் இதற்கு இரு முக்கியமான காரணங்களாகும். மார்க்கெட்டில் நூல் தாராளமாய்க்கிடைக்கும்போது, கைத்தறி நெசவுத் துணிக்கு கிராக்கி இருப்பது கிடையாது; நூல் கட்டுப்பாடு ஏற்பட்டால் கைத்தறி நெசவு துணிக்கு பெரிய கிராக்கி ஏற்பட்டுவிடுகிறது. நம் நெசவுத் தொழிலில் உள்ள பெரும் பிரச்னை இது. உள்நாட்டு ஜனங்களுக்கு மார்க்கெட்டில் மில் துணி கிடைப்பதைப் பொருத்து நம் நெசவுத் தொழிலின் சுபிட்சம் அமைவதாகிறது. வெளி ஏற்றுமதிக்கோ அல்லது வேறுகாரியங்களுக்கோ மில்கள் துணி உற்பத்தியில் தீவிரமாய் ஈடுபட்டு அதனால் உள்நாட்டுத் துணி தேவைகள் பாதிக்கப்பட்டால், கைநெசவுத் தொழிலுக்கு அதிக மதிப்பு ஏற்பட்டு அதில் அதிக சுறுசுறுப்பு காண்பதாக ஆகிறது. ஆனால் அப்போது தேவைக்கு ஏற்ப நெசவாளிக்கு நூல்கிட்டுவதில்லை. வேலைக்கு வேண்டிய நூல் இல்லை என்னும் குரல் ஒரே கூக்குரலாய் விடுகிறது. ஆனால் உள்நாட்டு மார்க்கெட்டில் மில் துணிகள் அதிகமாகக்கிடைப்பதாயிருந்து மில் நூலும் வேண்டியது கிடைத்தால், நெசவாளியின் சரக்குக்கு விலையில்லாமல் போய்விடுகிறது. மார்க்கெட்டின்மந்தம்காரணமாக நெசவாளி அப்போது போதிய அளவு சரக்கு தயார் செய்து விலை செய்ய முடிவதில்லை.

கைத்தறி நெசவாளர்களின் சுபிட்சமானது அவர்கள் அடையும் கூலியைப் பொருத்ததாகும். துணிக்கு மார்க்கெட்டில் கிராக்கி இருக்கும்போது அதிக அளவு கூலியை நெசவாளர் பெறுகிறார். ஆனால் துணி மந்தம் ஏற்படும் போது குறைந்தபட்ச கூலியைக் கொண்டு அவர்கள் காலம் போட வேண்டியிருக்கிறது. இந்த அளவுக்குக்கூட சில சமயங்களில் நெசவாளிக்கு, மார்க்கெட்டில் துணி தேக்கத்தினால், வேலை கிடைப்பதில்லை. வெளியிடங்களுக்கு சரக்குகளை ஏற்றுமதி செய்யும் ஒரு வகுப்பினர் மட்டுமல்ல வருமானம் சம்பாதிக்கிறார்கள். சிலோன், இந்தோனேஷ்யா, பர்மா, மேற்கு ஆப்ரிக்கா முதலிய தூர கிழக்கு நாடுகளுக்குத் தேவையான லுங்கிகள், கைக்குட்டைகள், இதரவகைச் சரக்குகள் இவற்றை அவர்கள் தயாரித்து அனுப்பி வருகிறார்கள். இந்நாடுகளிலெல்லாம் நம் சரக்குகளுக்கு நிரந்தரமான கிராக்கி இருந்துவருகிறது. நம் நாட்டின் ஏற்றுமதிக் கொள்

கைத்தறி துணியில் புதுமை!

நவீன டிசைன் சீட்டிகள்

கைத்தறி & செயற்கை பட்டு ஜவுளிகளை வியாபாரிகளுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் குறைந்த கூலியில் உயர்வான முறையில் (சீட்டி) மில்பிரிண்டிங் செய்து எக்ஸ்ட்ரா பாலீஷ் செய்து அனுப்புகிறோம்

விபரங்களுக்கு

M & C. பிரிண்டிங் மில்ஸ்

தபால்பெட்டி நெ. 61. ஈரோடு. S.I.

கையிலோ அல்லது இவ் வெளி நாடுகளின் இறக்குமதிக் கொள்கைகளிலோ மாறுதல் ஏற்பட்டாலன்றியில் இந்த கிராக்கி நிலைமை மாறுதலடையாது எனலாம். நமது உள்நாட்டுத் தேவைக்கு வேண்டிய ரகச் சரக்குகளின் விலை உயரும்போது, இந்த வெளி ஏற்றுமதிச் சரக்குகளின் விலையும் அதற்கு ஏற்றாற்போல் அதிகமாகிறது.

கைத்தறி நெசவாளிகளின் சரக்குகளை விற்பனை செய்வதில் இத்துறையில் அனுபவம் பெற்றுள்ள, ஒரு பிரத்யேக ஸ்தாபனமே சிறந்தொரு சாதனமாகும். வெளி ஏற்றுமதிக்கு மட்டும் இந்த ஸ்தாபனம் தக்க ஒத்தாசை செய்ய முடியாது. ஏனெனில் இந்த ஏற்றுமதியானது சில சப்பல் வியாபாரிகளின் ஏகபோக உரிமையாய் இருந்துவருகிறது. அவர்கள் சில பேடண்ட் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். தவிரவும் அவர்கள் தங்கள் ஏஜண்டுகளை ஆங்காங்கு ஏற்படுத்தி வெளிநாட்டு விற்பனையை நடத்திவருகின்றனர். கைத்தறி நெசவாளியானவர் தமது சரக்குகளை சந்தைகளுக்குக் கொண்டுபோய் உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்பதை நாம் காண்கிறோம். இந்த வியாபாரியானவர் நெசவாளிகளுக்கு குறைந்த விலை கொடுத்துத் துணி வாங்கி மக்களுக்கு அதிக விலைக்கு விற்று லாபம் பெறுகிறார். கைத்தறி வியாபாரி, பார்க்கெட்டில் சரக்கு பந்தமாயிருக்கும்போது வாங்கி இருப்பு வைத்து கிராக்கி வரும்போது அவைகளை நல்ல விலைக்கு விற்றுவிடுகிறார். நம் ராஜ்யத்தில் கைத்தறி நெசவுத் துணிக்கு தீபாவளி, பொங்கல், கல்யாணம் போன்ற விசேஷ சமயங்களில்தான் நல்லகிராக்கி ஏற்படுகிறது.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

நெசவாளிகளுக்கு நிகழ்ந்துள்ள மேற்கண்ட இன்னல்கள் அவர்களை நம் ராஜ்யத்தில், சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் போன்ற ஸ்தாபனத்தின் கீழ் ஒன்றுசேரத் தூண்டுவதாயின. சென்னை ராஜ்ய கூட்டுறவு நெசவாளர் சங்கமானது கிராமங்களிலும் நகர் புரங்களிலுமுள்ள 989 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை அங்கத்தினர்களாகக் கொண்டுள்ள ஒரு கூட்டமைப்பாக இன்று விளங்குகிறது. மில்களிலிருந்து நூலைக் கொள்முதல் செய்து பிரதம சங்கங்களுக்கு இது வழங்கிவருகிறது. இவ்வாறு கொடுக்கப்படும் நூலின் விலையானது எந்த இடத்திலும், அதாவது மில் வாசலுக்குப் பக்கத்திலுள்ள கிராமத்திலாயினும் சரி அல்லது, 800 மைல்களுக்கு அப்பாலுள்ள இடத்திலாயினும் சரி, ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது; இடங்களுக்கு ஏற்றாற்போல் கூடுதல், குறைவு இல்லை. நூல் அடக்க விலையின் பேரில் போக்குவரத்து முதலிய செலவுகளுக்கு சொற்ப லாபம் வைத்து இவ்வாறு கொடுக்கப்படுகிறது. இப்போது நூல் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபடியால், இந்த

100, 80 நெ. நூல்களின் விலையை குறைத்துத் திருத்தியமைக்கவும்.

:o:

கோவை நெசவாளர்களின் கூட்டத்தில் கோரிக்கை.

கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சங்கத்தின் ஆதரவில், அதன் தலைவர் துளசிராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் 23-1-52 தேதியன்று நெசவாளர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் சி. ராமராஜ், பி. எ. ராமசாமி, பி. கிருஷ்ணராஜ், சி. கே. முனிசாமி ஆகியவர்கள் நெசவுத் தொழிலை எதிர்நோக்கி நிற்கும் அபாயம் குறித்தும், 100 நெ. நூல் தொழிலுக்குப் போதுமான அளவு கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என வற்புறுத்தியும் பேசினர்.

கடைசியாக கே. எம். பொன்னுசாமி அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களாவது:—

(1) வெளிநாடுகளில் கைத்தறி ஜவுளிக்கு நிரந்தரமான மார்க்கெட் தேடவேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று மத்திய, ராஜ்ய சர்க்கார்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்வதுடன், அவ்வகையில் கைத்தறி ஜவுளி வியாபாரிகள் சங்கம், ஏற்றுமதியாளர்கள், வர்த்தக சபைகளும் வேணுயான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

(2) கைத்தறி நெசவாளர்களுக்கு இன்று நிர்ணயித்துள்ள 100, 80 நெ நூலின் விலைகள் கூலி கூடக் கிடைக்கப் போதுமானதாக இல்லையாதலால், அவைகளின் விலைகளைக் குறைத்துத் திருத்தியமைக்குமாறு இக்கூட்டம் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(3) வேலைப்பாட்டில் சிறந்ததும், மிகநுணுக்கமானதுமான 100, 80 நெ. நெசவாளர்களுக்கு, ராஜ்ய கைத்தறி கமிட்டியிலும், கோவை ஜில்லா கைத்தறி போர்டிலும், இச் சங்கத்திற்குப் பிரதிநிதித்வம் வழங்குமாறு கூட்டம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

ராஜ்பத்து கைத்தறிகளுக்கு அலாட் செய்யப்பட்டுள்ள கோட்டா அளவில் 36 சதமானம் ராஜ்ப நெசவாளர் கூட்டுறவு சங்கத்துக்குக் கிடைக்கிறது. சாதாரணமாய் ஒரு நெசவாளிக்கு பங்கீடு செய்யக்கூடிய நூல் அளவைக் காட்டிலும் 20 சதமானம் அதிகமாக கூட்டுறவு நெசவாளிக்கு நூல் வழங்க சர்க்கார் இதனுல் சலுகை காட்டி வருகின்றனர். ஒரு கூட்டுறவு சங்கத்தில் நூல் பெறும் நெசவாளியானவர், மேற்படி நூலை சங்கம் நிர்ணயித்துள்ள கூலிக்கு நெசவு செய்து சரக்கை சங்கத்தினிடமே திருப்பி ஒப்படைக்க வேண்டும். சங்கத்தில் சேராத ஒரு தனி நெசவாளிக்கு, தாம் வியாபாரியிடம் பெறும் நூலைக்கொண்டு எவ்வளவு அதிக பட்ச லாபம் வேண்டுமானாலும் சம்பாதிக்க சந்தர்ப்பம் இருக்கிறது. கூட்டுறவு நெசவாளிக்கு அவ்வாறு இல்லாததால்தான், மற்ற நெசவாளியைக் காட்டிலும் சிறிது கூடுதலாக நூல் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு அதிகம் நூல் கிடைப்பதானது, மற்ற நெசவாளர்களையும் சங்கத்தில் மெம்பராகச் சேர ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது. தவிரவும், நெசவு சங்கத்தில் மெம்பராகச் சேர்வதால் நெசவாளி நெய்த சரக்கின் விற்பனைப் பொறுப்பை சங்கம் ஏற்றுக்கொள்வதால் சரக்கு விற்பனையைப்பற்றிய கவலை அவருக்கு இல்லை. வேலைக்கு வேண்டிய நூலைத் தேடி நெசவாளி வியாபாரியிடமும் போகவேண்டிய அவசியமும் அவருக்கு ஏற்படுவதாயில்லை. சங்கத்தின்மூலம் அவருக்கு சப்ளை கிடைக்கிறபடியால் கைமுதல் இல்லாமலே அவர் நூல் பெற்று காலக்ஷேபம் நடத்த சௌகரியமுண்டாகிறது. உள்ளூரில் கிடைக்கும் கூலிக்குமேல் சிறிது அதிகமாகவே சங்கத்திடமிருந்து நெசவாளி மெம்பருக்கு கூலி கிடைக்கிறது. தனி நபர் மாஸ்டர் வீவர்கள் தங்கள் நெசவாளிகளுக்கு போதிய கூலி கொடுக்கவேண்டுமென்று, சட்டப்படியோ அல்லது சமுதாய நேர்மைப்படியோ, அவர்களுக்கு யாதொருவிதமான நிர்ப்பந்தமும் கிடையாது. மார்க்கெட்டில் சரக்கு தேக்கமாயிருக்கும்போது கூட கூட்டுறவு சங்கம் அதன் வேலையை நிறுத்துவதில்லை. ஆகையால் சங்கத்தின்மூலம் நெசவாளிக்கு எப்போதும் வேலை இருந்துகொண்டே இருக்கும். மார்க்கெட்டில் தேக்கமாயிருக்கும்போது அந்நெசவாளிக்கு கூலிதான் சிறிது குறைந்து கிடைக்கலாம். ஆகையால் சங்கத்தைச் சேர்ந்த நெசவாளிக்கு வேலையில்லாமல் இருக்கவேண்டிய நிலை ஏற்படுவதில்லை. இந்தக் காரணங்களால் நெய்தொழில் செய்பவர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேர பெரிதும் பிரியப்படுகின்றனர். ஆனால்; மேற்படி சௌகரியங்கள் எல்லாம் போதாது என்றுதான் சொல்லவேண்டும். தவிரவும், இந்த கூட்டுறவு சங்கங்களின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நெசவாளர் பெருமக்களுக்கு தொடர்ந்து நன்மையளிக்கவல்லதாய் இக் குடிசைத் தொழில் அமையவில்லை.

கைத்தறி உற்பத்திச் சரக்குகளின் தரத்தை, கூட்டுறவு முறை மூலம் சீராக்க முடிவதாகிறது. எந்த இரண்டு நெசவாளியும், அவர் தன்னிச்சையாய் விடப்பட்டால், ஒரேரகமான துணியைத் தயார் செய்யமாட்டார் எனலாம். ஆனால் 200 நெசவாளிகளைக் கொண்ட ஒரு கூட்டுறவு சங்கமானது, அந் நெசவாளிக்குப் பழக்கமான ஒரு குறிப்பிட்ட ரக துணியை, அவர்கள் தயார் செய்யவேண்டுமென்று சட்டாயப்படுத்தி, தயார் செய்யமுடிகிறது. இதமாதிரி ஒரே ரகரீதியில் துணிகளைத் தயார் செய்வதால் மார்க்கெட்டில் அவைகளுக்கு கிராக்கி ஏற்படுத்தவும், மொத்த ஆர்டர்களை சங்கங்களால் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றவும் வசதியேற்படுகிறது. இந் நெசவு சங்கங்களின் சரக்குகளின் ஒரு பாகத்தை வாங்கி தக்கபடி விளம்பரப்படுத்தி இந்த ராஜ்பத்திலுள்ள 108 விற்பனை டிப்போக்கள் மூலமும். ராஜ்பத்துக்கு வெளியிலுள்ள கல்கத்தா, ஹைதராபாத், செகந்தராபாத். பங்களூர், கொழும்பு, திருவனந்தபுரம் முதலிய வெளி இடங்களிலும் விற்பனைசெய்ய சென்னை ராஜ்ப கூட்டுறவு நெசவாளர் சங்கமானது ஏற்பாடு செய்து வருகிறது. இதுமாதிரி, சங்கங்களின் சரக்குகளை விற்பனை செய்வதில ராஜ்ய சங்கமானது, அதற்கு அத்யாவசியமாய்த் தேவையான லாப வரம்புக்கு மேல் அதிகமாக லாபம் வைப்பதற்கில்லை. நெசவாளிக்கு, அவரது காலக்ஷேபத்துக்கு உகந்த அளவாவது கூலி கிடைக்கும்படி பார்த்துக்கொள்வதுடன் சம்பந்தப்பட்ட சங்கத்துக்கு சிறிய லாப வரம்பும். ஒவ்வொரு விற்பனை எம்போரியத்தின் சிப்பந்தி, போக்குவரத்து. இன்ஷ்யூரன்ஸ் முதலிய செலவுகளையும் சமாளித்துக்கொண்டு, மட்டமான சரக்குகளை விலை குறைத்து விற்பனை செய்யும் வெளி வியாபாரிகளின் போட்டியையும் சரிக்கட்டி வியாபாரம் நடத்துவதானது ஒரு பிரச்னையேயாகும். ஒரு கூட்டுறவு சங்கத்

(17 பக்கம் பார்க்க)

புதிய மந்திரி சபைக்கு (1)

நமது நாட்டின் சரித்திரம் என்றுமே கண்டிராத பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்று முடிந்துள்ளது. வயது வந்தோர் அனைவருக்கும் முதன் முதலாக வாக்குரிமை யளித்து நடத்தப்பட்ட தேர்தல் இதுவானதால், தேர்தல் ஆரம்பமாகுமுன்பு பலர், தேர்தலைப்பற்றி நல்ல நம்பிக்கைகூடத் தெரிவிக்க அஞ்சினர்.

“அமைதியாகத் தேர்தல் நடைபெறுமா?” என்கின்ற ஐயப்பாட்டையே பலர் கிளப்பினர். படித்தவர்கள் கூட, “பாமரர்களுக்கு வோட்டுரிமையா?’ என்று அடிப்படை உரிமையையே ஆட்சேபித்தனர். “இனி நாடு உருப்படாது” எனச்சிலர் சபித்தனர். இன்னும் இதுபோன்று எத்தனையோ!

ஆனால், எந்தப் பாமரமக்களைக் கண்டு அமைதியாகத் தேர்தல் நடைபெற இவர்கள் உதவியாக இருக்கமாட்டார்கள் எனப் படித்த கூட்டத்தார் சொன்னார்களோ, அவர்களின் கூற்று — கணிப்பு முற்றிலும் அர்த்தமற்றது; அடிப்படை யில்லாதது என்பதை வாக்காளர்கள், உலகம் மெச்சும் வகையில் நடைமுறையில் தேர்தலில் கலந்துகொண்டு நிரூபித்துவிட்டனர்.

எவ்வித ஆபாசமும் நடைபெறுவண்ணம், அமைதிக்குத் துளிகூடக் களங்கமேற்படாவண்ணம் வாக்காளர்கள் நடந்துகொண்டுள்ளது போற்றத்தக்கதாகும்.

அதேபோல, தேர்தலை நடத்திவைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட அதிகாரிகளில்வெகுசிலரைத் தவிர, பெரும்பாலோர் நடுநிலையாகவும், திறமையாகவும், பொறுப்புணர்ச்சியோடுமே நடந்துகொண்டிருக்கின்றனர்.

இது போன்ற ஒரு போதுத் தேர்தல் அனுபவமே நமக்கும், நாட்டிற்கும் புதிது என்றாலும், வெகு அமைதியாகவும், ஒழுங்காகவும் தேர்தலை நடத்தி முடிக்கப்பட்டிருப்பதானது, சமாதான வழியில் எவ்வளவு பெரிய சீர்திருத்தத்தையும் நாட்டில் மக்கள் விரும்பினால் சட்டபூர்வமாகவே செய்துவிடமுடியும் என்பதையே படம் பிடித்துக் காட்டுகிறது.

தேர்தல்காலத்தில் நடைபெற்றுவிட்டதாகச் சொல்லப்படும் ஒழுக்கீனங்கள் எல்லாம் மன்னிக்கவேண்டியவையே. காரணம்; அத்துறையில் போதுமான பயிற்சி, அனுபவம், பொறுப்புணர்ச்சி ஆகியவைகள் கணிசமான அளவு தேர்தலில் கலந்துகொண்ட அனைவருக்குமே பூரணமாக ஏற்பட்டுவிடாததுதான்.

எம். கே. சாமி.

நிகழ்ந்துள்ள தவறுகள் அனைத்தும், எதிர்காலத்தில்நிகழாமல் பார்த்துக்கொள்ளக் கிடைத்த— திருத்திக்கொள்ளப்படவேண்டிய படிப்பினைகள் என்ற முடிவுக்கே அனைவரும் வரவேண்டும். தவறுகள் ஏற்படுவதே திருத்திக்கொண்டு முன்னேறிச்செல்வதற்காகத்தானே?

ஃ ஃ ஃ

இந்தப் பொதுத் தேர்தலில் சிறந்த அறிவாளிகள், திறமைசாலிகள் பலர் தோற்றிருக்கிறார்கள்; அல்லது தோற்கடிக்கப்பட்டார்கள்!

மக்களைவஞ்சித்தவர்கள், ஏமாற்றியவர்கள், கொடுமைப்படுத்தியவர்கள், அன்றாடப் பிரச்னைகளைக்கவனித்து அவைகளைத் தீர்க்காது, அதிகாரத்தைத் தங்கள் சொந்த நலன்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு மக்களை மறந்துவிட்டவர்கள் தோற்றுப்போவதைப்பற்றி, மக்கள் நலன்பேணும் எவருமே கவலை கொள்ளமாட்டார்கள்தான்.

ஆனால், இக் காரணங்களுக்கெல்லாம் மாறுபட்டவர்கள், புறம்பானவர்கள் அவர்கள் எக்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரியே தோற்றிருக்கிறார்கள்.

இம்மாதிரியான தோல்விகளுக்கு வெறும் அரசியல் காரணங்கள்மட்டும்தான் ஜவாப்தாரியென்பதில்லை. அரசியல் காரணங்களோடு, மக்களும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக விழிப்போடு—மனப்பண்போடு இருந்தார்கள் என்று சொல்லமுடியாததும் ஒன்றாகும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இதை நாம் கூறுகிறபோதே, மனப்பண்பு ஏற்படாத மக்கள் கையில் பதமுள்ள வோட்டுரிமையை அளித்தது சுத்தத் தவறு என்கிற வாதத்தை ஏற்றுக்கொள்வதில்லை. அது தோல்வியைக் கண்டு குலை நடுங்கும் கோழைகள் கூறும் வாதமாகும்.

தேர்தல், நல்லதொரு அரசியல் விழிப்பை மக்களுக்கு உண்டாக்கியிருக்கிற உண்மையை நேர்மையான அரசியல்வாதிகள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். தேர்தல் காலத்தில் ஏற்பட்டுள்ள விழிப்பு, திட்டமான நல்லபாதைக்கு அடிகோலப் பயன்படவேண்டும்—பண்படவேண்டுமென்பதே நம் அவா, இதை மக்கள் நலன் பேணும் அனைவரும் செய்ய முன்வரவேண்மென்றே நாம் விழைகின்றோம்.

தேர்தல் தந்துள்ள முடிவு, கணிசமான பலத்தை—சர்க்கார் அமைக்கும் சந்தர்ப்பத்தை – நம் ராஜ்யத்தைப் பொருத்த அளவில் எக்கட்சிக்கும் அளிக்கவில்லை என்பது தெளிவு. ஆகவே எந்த ஒரு கட்சி சர்க்காரை அமைக்க முன்வந்தாலும், தங்கள் கொள்கைக்கு மாறானவர்களின் கூட்டுறவு இல்லாமல் சர்க்கார் அமைக்கமுடியாது என்ற நிலைமையையே இன்று நாம் பார்க்கிறோம்.

இது போன்ற ஒரு நிலை வரவேண்டியதுதானா என்ற கேள்விக்கு விடையளிக்க, கட்சி, அரசியல் சார்பற்ற "கைத்தறி" தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள தயாராக இல்லை. காரணம்; "கைத்தறி" நெசவுத் தொழில் வளர்ச்சியிலேயும், அதைச்சார்ந்துள்ள உபதொழில்கள், வர்த்தகம்போன்றவைகளின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் மட்டுமே அக்கறை காட்டுவதால் — லட்சியமாகக் கொண்டிருப்பதால் அரசியல் விவகாரங்களில் அது துளிகூடத் தலையிடுவதில்லையென்பது கடந்த மூன்றாண்டுகளாகக் "கைத்தறி"யைத் தொடர்ந்து பார்த்துவந்த நேயர்கள் நன்கு அறிவார்கள்.

யார் எக்கட்சியைச் சேர்ந்திருந்தாலும், அவர்கள் கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சிக்காக, முன்னேற்றத்திற்காக எதைச் செய்யமுன்வரினும், நாம் அதை மனப்பூர்வமாக ஆதரித்தே வந்திருக்கிறோம். அதில் யாரையும் "கைத்தறி" இதுவரை கட்சி வித்தியாசம் பாராட்டியதே கிடையாது. இனிமேலும் அதுதான் இதுவரை பின்பற்றிவந்த போக்கிலேயே—லட்சிய வழியிலேயேதான் செல்லும் என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்திக் கூற நாம் விரும்புகிறோம்.

நமது ராஜ்யத்திலே எப்படியும் ஒரு புதிய மந்திரிசபை அமையத்தான்போகிறது. அந்த மந்திரிசபை அதிகாரத்தை ஏற்றுக்கொண்டதும், ராஜ்யத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்டமட்டில் என்னென்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி இங்கு வற்புறுத்திக் கூற நாம் விரும்புகிறோம்.

தேர்தலில் கலந்துகொண்ட சகல கட்சியினரும், சுயேச்சையாளர்களும் கைத்தறிநெசவாளர்களுக்கு, அவர்களின் தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்கக்கொடுக்கத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் போராடுவோம்; வாதாடுவோம் என வாக்குறுதியளித்துள்ளனர்.

தவிர, இன்றைக்கு நெசவாளர்கள் அனுபவித்துவரும் சகல இன்னல்களையும் போக்கவும் இடைவிடாது முயற்சிப்போம் என்றும் கூறியுள்ளனர். குறிப்பாகப் பல இடதுசாரி முற்போக்குக் கட்சியினர், நெசவாளர் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தி-வளர்த்து அதன்மூலம் அவர்களின் உழைப்பைப் பிறர் சுரண்டாதுதடுத்து, உழைப்பின் பலன் முழுவதையுமே கைத்தறி நெசவாளர்கள் அடையச் செய்வோம் எனவும் திட்டமாகக் கூறியுள்ளனர்.

மேலும், நடைமுறையில் இன்றுள்ள நூல் வினியோக ஊழலை உடைத்தெறிந்து, ஏற்றத்தாழ்வான — பாரபட்சமான அலாட்மெண்ட் முறைகளுக்கு முடிவு கட்டி ஒரு ஒழுங்கான நூல் வினியோகத் திட்டத்தை வகுத்து அதை நெசவாளர் கூட்டுறவு இயக்கத்தின்மூலமாக அமுல் நடத்துவோமெனவும் சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறியுள்ளனர்.

இந்த வாக்குறுதிகளை இங்கு நாம் சுட்டிக்காட்டுவதன் நோக்கமே, இவைகளை நடைமுறையில் நிறைவேற்றிக்கொடுக்க ஆயத்தம் ஆகிக்கொள்ளுங்கள் ஆட்சிக்கு வருவோரே என்று நினைவூட்டத்தான். தேர்தல் காலத்தில் அளித்துள்ள மேற்கண்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற எவர் தவறினாலும் சரியே. அவர்களை நியாய உணர்வு கொண்ட — உரிமை வேட்கை பெற்றுள்ள கைத்தறி நெசவாளர்கள் சும்மா விடமாட்டார்கள் என்பதை அறிவுறுத்தவேதான் நாம் மேற்கண்ட தேர்தலில் நின்று ஓட்டுப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அளித்துள்ள வாக்குறுதிகளை ஞாபகப்படுத்துவது.

தேர்தலிலே நின்றவர்கள் அளித்துள்ள மேற்கண்ட வாக்குறுதிகள் அதீதமானதல்ல; மிதமானதுதான். காரியத்தில் நிறைவேற்றிக் கொடுக்க முடிவதுதான்.

என்றாலும், தேர்தலில் கலந்துகொண்டு நெசவாளர்களுக்குப் போதுமான நூல் தருவதாகச் சொல்லியவருமே, அதை எப்படிக் காரியத்தில் நிறைவேற்றுவோம் எனச்சொல்லவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் சென்னையில் கூடிய காங்கிரஸ் அல்லாத எம். எல். ஏக்களின் கூட்டத்தில்கூட, அவர்கள் வகுத்துள்ள திட்டத்தில் நில சீர்திருத்தத்தைப்பற்றியும், உணவு உற்பத்திப்பெருக்கு, கொள்முதல் போன்றவைகளைப் பற்றியும், பிரஜாஉரிமைகள் வழங்குவது பற்றியும் நீண்ட விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேகாலத்தில் அவர்கள் கைத்தறி நெசவாளர்களின் நூல்பிரச்னையைப் பற்றி "ராஜ்யத்திலுள்ள கைத்தறி நெசவாளருக்குப் போதுமான நூல் கோட்டாவைப் பெற்று நூல்பிரச்னையை சமாளிப்பது" என்றுதான் சொல்லுகிறார்கள்; விளக்கமில்லாமல்.

யாரிடம் யார் கோட்டா பெறுவது? அதைப்பெற எத்தகைய முயற்சி எடுக்கப்படும்? தேவையான் அளவு கோட்டா கிடைக்காதபோனால் காங்கிரஸ் அல்லாத சர்க்கார் நூல் பிரச்னையைச் சமாளிக்க என்ன செய்யும்? என்பதற்கெல்லாம் விளக்கங்களேயில்லை.

நிலப் பிரபுத்துவத்தை கண்டு— அதன் கொடுமைகளைக் கண்டு — பண்ணையடிமைமுறையைக்கண்டு வெகுண்டு நிற்கும் அந்தத் திட்டம், டெக்ஸ்டைல் மில் முதலாளித்வத்தின் முன்னால் விளக்கம் கூறாது வாய்மூடி மவுனியாகிவிட்டதன்மர்மம் என்னஎன்று நியாய உணர்வோடு கேட்கிறோம்.

நூல் உற்பத்தியைப் பெருக்குவது பற்றியோ, அதைக் கட்டுப்படுத்தி வார்ப்பது குறித்தோ ஏன் சொல்லப்படவில்லை? போதுமான நூல் நெசவாளர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பதும் சரி, அல்லது ராஜ்யத் தேவை போக மீதியைத்தான் வெளியே எடுத்துக்கொண்டு செல்லவேண்டுமென்று கூறுவதும் சரி அதை எப்படி நிறைவேற்றுவோம் என்பதற்குத் திட்டமோ, விளக்கமோ ஏன் கூறவில்லை?

கோஷம் சரியானதாக இருக்கலாம். அதை அடைவதற்கான மார்க்கம் என்ன என்பதைஏன் சொல்லக்கூடாது என்று நெசவாளர்கள்பால் நியாய உணர்ச்சி கொண்டு கேட்கிறோம்.

இதே போன்ற முடிவை காங்கிரஸ் அல்லாதார் மட்டுமல்ல; காங்கிரஸ்காரர்களேசெய்தாலும் கேட்கிறோம் விளக்கம் கூறுங்கள் என்று.

“தேவையான நூல் கொடுக்கிறோம்” என்றாலே ராஜ்யத்திற்கு தனியான டெக்ஸ்டைல் கொள்கையை நாங்களே வகுத்துக்கொ

(15ம் பக்கம் பார்க்க).

கைத்தறி எம். எல். ஏக்கள்.

கைத்தறி நெசவுத் தொழில், வர்த்தகம், கூட்டுறவு போன்ற ஸ்தாபனங்களில் பதவி வகித்து நெசவாளர்களின் அன்றாடப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் பெரிதும் அக்கரை காட்டும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ராஜ்ய சட்ட சபையின் புதிய எம். எல், ஏக்கள்.



(1)

தோழர் ப. ஜீவானந்தம்

தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர். வட சென்னைத் தொகுதியில் ஐக்கிய முன்னணியின் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றுள்ளார்.

(2)

திரு. ஏ. ஜே. அருணாசல முதலியார்

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியின் பொக்கிஷதாரர். ராஜ்ய கைத்தறி கமிட்டியின் அங்கத்தினர். குடியாத்தம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றிபெற்றுள்ளார்.

(3)

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

தமிழ்நாடு நெசவாளர் காங்கிரஸ் தலைவர். சேலம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றுள்ளார்.

(4)

தோழர். டி. எஸ். அர்த்தநாரி

உண்மையான கைத்தறி நெசவாளி. தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனம் திருச்செங்கோடு கிளையின் தலைவர்- ஐக்கிய முன்னணியின் சார்பில் நின்று பெருவாரியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

(5)

திரு. ஆர். குப்புசாமி

கோவை ஜில்லா நெசவாளர் காங்கிரஸின் தலைவர். கோவை மதுக்கரைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றுள்ளார்.

மாசி **கைத்தறி** இதழ்

(தொழில், வர்த்தக மாத வெளியீடு)

தறி 3 ★ கோவை 15–2–52. ★ பாவு 4

கிளர்ச்சி தேவை!

கைத்தறி ஜவுளி வர்த்தகத்தில் சமீப இரண்டு மாதங்களாக ஏற்பட்டுள்ள மந்தம், மிகப் பெரிய அளவிற்கு நெசவாளரின் கூலியைப் பாதித்துவிட்டிருக்கிறது. எங்கும் கைநெசவு ஜவுளிகளின் தேக்கமும், உற்பத்தியின்மீது தினசரி ஏற்பட்டுவரும் விலைக்குறைவும் வர்த்தகர்களை ஸ்தம்பிக்க வைத்திருக்கிறது.

இதற்கு அடிப்படைக் காரணங்கள் பல. உள் நாட்டுக்குத் தேவையான ரகங்கள், வாங்கும் சக்தியை மக்கள் இழந்துவிட்டதால் சரிவர விற்பனையாகாதது ஒன்று. கைத்தறி ஜவுளியின் மார்க்கெட்டுகளாக இருந்துவந்த அன்னிய நாட்டு மார்க்கெட்டுகளைப் பற்றி இந்திய சர்க்காரின் வர்த்தக இலாகா சரிவரப் பாதுகாத்து வராதது மற்றொன்று.

வெளிநாட்டு ஜவுளி ஏற்றுமதியில் அதிகமாக இடம் பெற்று வருவது மில் துணிதான் என்பது, இந்திய சர்க்கார் ஏற்றுமதிக் கண்ட்ரோலரின், ஏற்றுமதிக்கான பர்மிட்டுகள் வழங்கும் குறிப்புகளிலிருந்து நன்கு தெரியவரும்.

என்றைக்குமே இல்லாத அளவு இந்திய மில் ஜவுளிகள், ஏற்கனவே கைத்தறி ஜவுளி மார்க்கெட்டுகளாக இருந்துவந்த கிழக்கு ஆசிய நாடுகளுக்கு கடந்த இரண்டாண்டுகளாக அனுப்பப்பட்டு வந்திருக்கிறது. இதைக் கைத்தொழில் மந்திரியார் ஹரிகிருஷ்ண மஹதாபே பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

பார்லிமெண்டில் ஸ்ரீ பி. கே. தாஸ் என்பவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலே 1951-ம் ஆண்டு 74 கோடியே 10 லட்சம் கெஜம் மில் துணியும், 3 கோடியே 50 லட்சம் கெஜம் கைத்தறித் துணியும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக ஸ்ரீ மஹதாப் அறிவித்துள்ளார். இதில் சர்க்கார் தனது வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் அனுப்பியது 16 கோடியே 18 லட்சம் கெஜங்களாகும். அதிகார பூர்வமான வர்த்தக ஒப்பந்தங்கள் மீதல்லாமல், 61 கோடியே 42 லட்சம் கெஜங்களை (பெரும்பகுதி மில் துணி) சுயேச்சையாக பர்மிட்டுகள் மூலம் ஏற்றுமதி செய்யப் பலருக்கு அநுமதியளிக்கப்பட்டிருக்கிறது என்பதையே மேற்படிக் கணக்குகள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மொத்தத்தில் வெளிநாட்டு ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்தில் கைத்தறி ஜவுளி இடம் பெற்றிருப்பது மிகமிகக் குறைவானது என்பது தெளிவு. சர்க்காரின் ஏற்றுமதி வர்த்தகக் கொள்கையை நிர்ணயிப்பதில், இந்திய—குறிப்பாக வடநாட்டுப் பஞ்சாலை மன்னர்களுக்குள்ள வாய்ப்பு, கைத்தறி நெசவாளர்களுக்கோ, அல்லது உற்பத்தியாளர்களுக்கோ இல்லையென்பதை சொல்லித் தெரிய வேண்டுமென்பதில்லை.

அகில இந்திய கைத்தறி போர்டோ, அல்லது ராஜ்ய கைத்தறி கமிட்டிகளோ இருந்து யாது பயன்? இவைகள் கூடிக்கலையும்—வெறும் ஆலோசனை சொல்லும் சபைகளாக இருக்கின்றனவே தவிர, திட்டமான கொள்கைகளை வகுத்து அமுல் நடத்தும் அதிகாரம் படைத்தவைகளாக இல்லையென்பதே நடைமுறைச் சம்பவங்களிலிருந்து தெரியவருகிறது.

கைத்தறி ஜவுளி வர்த்தகர்களின் ஸ்தாபனங்கள், வெளிநாட்டு ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்தில் கைத்தறி ஜவுளியை கணிசமாக சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கோரிய போதெல்லாம் அவர்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப் பட்டேவந்திருக்கின்றன.

உதாரணமாக, அண்மையில் ஈரோடு சுதேசி ஜவுளி வர்த்தகர்களின் சங்கம் இந்திய சர்க்காருக்கு இது போன்ற ஒரு கோரிக்கையை கடித மூலமாக எழுதிக் கேட்டுக்கொண்டதற்கு சர்க்காரிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. அதற்குப் பதில் கோரிக்கை மறுக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை மேலும் நீடிக்குமானால் கைத்தறி ஜவுளி வெளிநாட்டு வர்த்தகம் அடியோடு பாதிக்கப்படுவதுடன், நெசவாளர்களின் வாழ்க்கையும், அவர்களது பெருமைமிக்க தொழிலில் பெரும்பகுதியும் நசித்தே போய்விடும் என எச்சரிக்கிறோம்.

கைத்தறி ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்தில் இந்தியசர்க்கார் தனது கொள்கையை அடியோடு மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், கைத்தறி ஜவுளி ஏற்றுமதிக்கே முதலிடம் அளிக்கவேண்டுமென்றும், வெளிநாடுகளில் புதிதாக கைத்தறி ஜவுளிக்கு நிரந்தரமான மார்க்கெட் தேட தூது கோஷ்டியொன்றைவிரைவில்அனுப்பிக்கொடுக்க வேண்டுமென்றும் ராஜயத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் ஸ்தாபனங்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களின் ஸ்தாபனங்கள் ஒரு முகப்பட்டு கிளர்ச்சி செய்யாதவரை, தொழிலையும் வர்த்தகத்தையும் எதிர் நோக்கி நிற்கும் பயங்கரமான தாக்குதலிலிருந்து தப்பவே முடியாது என நாம் எடுத்துக் காட்டுகிறோம்.

கடந்த இரண்டாண்டுக் கால வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையைக் கண் கொத்திப்பாம்பு போல் பார்த்திருந்து, அதன் பாதகங்களை அவ்வப்போது இந்த ராஜ்ய கைத்தறியாளர்கள் கண்டிக்காமல் விட்டுவிட்ட தன் விளைவு—அதன் பலன் தான் இன்று நமது கைத்தறி ஜவுளி வர்த்தகத்தைத் தேக்கத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

இப்பேருண்மையை உணர்ந்துவிட்ட பின்பு நாம், நமது தொழில், வர்த்தகம் ஆகியவைகளின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் இருக்க முடியுமா? பாதுகாப்புத் தேடாமல் இருக்க முடியுமா? எனவே, நமது தொழில், வர்த்தகப் பாதுகாப்பிற்கான கோரிக்கையை முன்வைத்து சமாதானப் பாதையில் கிளர்ச்சி செய்வோமாக.

உங்களின் நித்திய பூஜைக்கு

கோபால் கற்பூரம்

சிறந்தது.

செட்டியாரின் மறைவு.

அண்மையில் கோவை - நீலகிரி பார்லிமெண்ட் தொகுதியில் போட்டியின்றி பார்லிமெண்ட் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், தலைசிறந்த கூட்டுறவாளருமான **ஸ்ரீ டி. ஏ. ராமலிங்கம் செட்டியார்** அவர்கள் 12-2-52 தேதியன்று மாரடைப்பால் இயற்கை எய்தினர் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகின்றோம்.

சென்னை ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்காக அவர் செய்துள்ள சேவையை எவரும், என்றும் மறந்துவிட முடியாது.

செட்டியார் அவர்களின் பிரிவு, ராஜ்ய கூட்டாளர்களிடையே ஈடுசெய்ய முடியாத நஷ்டத்தையே உண்டாக்கியிருக்கிறது. அவர் தனது பொது வாழ்வில் கூட்டுறவு சமுதாய அமைப்பைக்காணப் பெரிதும் பாடுபட்டார்.

கூட்டுறவாளர்கள் வேஷத்தில் பலர், கூட்டுறவு அதிகாரிகளின் எடுபிடி சேவகர்களாக இருப்பதை அவர் என்றுமே கண்டித்து வந்திருக்கிறார். அதேபோல கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கும் எந்த அதிகாரியையும் அவர் கண்டித்தே வந்திருக்கிறார்.

செட்டியார் என்றாலே கூட்டுறவு அதிகாரிகளுக்கு சிம்ம சொப்பனம்தான். எந்த அதிகாரியின் தயவு தாட்சண்யத்திலும் கூட்டுறவு இயக்கம் பரவாது என்பதை நன்கு தெளிவர உணர்ந்ததாலேயேதான், கூட்டுறவு லட்சியக் கொடியை உயர்த்திப் பிடித்து—மக்கள் பலத்தில் நம்பிக்கை வைத்து பல்வேறு கூட்டுறவு சங்கங்களைக் கட்டி வளர்க்கப்பெரிதும் அவர் உதவியாக இருந்திருக்கிறார்.

நாட்டில் நடந்த பல்வேறு கூட்டுறவு மாநாடுகளுக்குத் தலைமைதாங்கி அவர் பேசியுள்ள பேச்சுக்கள், கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க விரும்புவோருக்கு பெரிய கலைப் பொக்கிஷமாக இன்றும் இருந்து வருகிறது.

அன்னாரின் மறைவு, அவர் வளர்த்து வைத்துச் சென்றுள்ள கூட்டுறவு இயக்கத்திற்கே பூர்த்தி செய்யமுடியாத நஷ்டமெனினும், அவரின் தீர்மான வழியில் கூட்டாளர்கள் அனைவரும் முனைந்து அவரின் லட்சியத்தைப் பூர்த்தி செய்ய சபதமேற்பதே அவருக்கு செய்யும் உண்மை மரியாதையாகுமென்பதை நாம் ஞாபகமூட்டுகிறோம். ஸ்ரீ டி. ஏ. ஆர். அவர்களின் மறைவால் வருந்தும் அனைவருக்கும், அவர் குடும்பத்தாருக்கும் நமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

திக்குத் தெரியாத நிலைமை...

[மா. மாரிமுத்து]

அரசியல் வாதிகளின் பார்வை

சென்னை ராஜ்யத்தில் ஆட்சி அமைப்பிலே இருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு எம். எல். ஏ. க்களை வளைத்துக்கொண்டிருக்கின்றனர். கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லையே என்ற சபலநிலை கட்சிகளுக்கெல்லாம் பொது நிலையாகி விட்டது.

மக்களின் பிரதிநிதிகளாக சட்டசபையை எட்டிப் பிடிக்க குடிமக்களிடையே சோடிக்கணக்காக கொட்டிக்கொடுத்தரூபாய், பொதுமக்களில் சிலரிடமாவது வசதியையும், வாங்கும் சக்தியையும் தூண்டி விட்டிருக்கிறது. வலைவீசி ஓட்டுக்களைப் பிடிப்பதில் செலவழிந்த பணத்தை நினைத்துக்கொண்டே இருப்பவர் சிலருண்டு. ஆனால்....

தேர்தலுக்கு முன் இடறிவிழுந்த கைத்தறி ஜவுளி மார்க்கெட்டின் சண்டித்தனத்தில்மாற்றம் இல்லை. கைத்தறி ஜவுளி மார்க்கெட்டின் திடீர் விலை ஏற்ற இறக்கத்தோடு, மில் துணிகளின் எதிர்பாராத பெரும்அளவு வினியோகம் போன்ற சிலகுறிப்பிடத்தக்க தற்காலிகமான இடைக்காலத்தியகாரணங்கள் தேர்தல் சமயத்தில் கைத்தறி ஜவுளி மார்க்கெட்டை சின்னாபின்னப்படுத்தியிருக்கிறது. மற்ற ராஜ்யங்களுக்கென சில குறிப்பிட்ட ரக கைத்தறி ஜவுளியைத் தயாரித்த பெரும் வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நஷ்ட அதிர்ச்சி இன்னும்தீர்ந்தபாடில்லை. சில ஆண்டுகளில் சேர்த்த லாபத்தின் முழுப்பகுதிக்கு மேல் ஒரே ஆண்டில் இழந்துவிட்டு, அந்த ரகத்தையே பாராமுகமாக இருக்கும் வியாபாரிகளும் உண்டு. தேர்தல்சமயத்தில் குட்டிக் கட்டுப்பாடுகளை பம்பாய் போன்ற ராஜ்யங்களில் தளர்த்திவிட்டதாலும், ஒரிசா போன்ற மற்றும் சில ராஜ்யங்களில் மில் ஜவுளி பொதுமக்களின் அப்போதைய தேவைக்குமேல் கிடைப்பதற்கு போதிய வசதியும் செய்துகொடுத்ததால் வெளி ராஜ்யங்களுக்கென தயாராகிய கைத்தறி ஜவுளிகளை இருப்பு வைக்கவேண்டிய இக்கட்டான நிலையில் வியாபாரிகள் தவிக்கவேண்டியதோடு, மில் ஜவுளிகளின் நடுத்தர ஜவுளி ரகங்களின் குறைந்த விலையோடு போட்டியிட்டு தங்களுடைய கைத்தறிஜவுளியின் விலையைபெரும் நஷ்டத்திற்கு குறைத்து விற்க இயலாமல் விழித்தனர். இந்த கைத்தறி ஜவுளியை வாங்கும் வெளிராஜ்யத்து வாடிக்கை வியாபாரிகளுக்கு போதிய அளவு குறைந்த விலையுள்ள மில் துணிகளின் திடீர் பிரவேசத்தால், கைவசமிருந்த கைத்தறி துணிகளை விற்க முடியாமல் நஷ்டக்கணக்கில் காலைவிடவேண்டியதாயிற்று. சில குறிப்பிட்ட கைத்தறி ஜவுளி ரகங்களைப் பொருத்தமட்டில் நம் ராஜ்ய வியாபாரிகளுக்குஅந்தரகத்தை இனிமேல்பெரும் அளவில் உற்பத்தி செய்ய துணிச்சலில்லை! கைவசமிருந்த இருப்புக் சரக்கும் நஷ்ட வியாபாரத்தில் காலியாகிவிட்டது. இந்த ரகங்களை வாங்கும் வெளி ராஜ்ய வியாபாரிகள் தேங்கிய கையிருப்பு மில் துணியை விற்பனை செய்வதைத் தவிர கைத்தறி ஜவுளிகளைக் கொள்முதல் செய்ய இயலாமல் அதன் விலைக்கும்உற்பத்திக்கும் நம்ராஜ்யத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

கதியற்ற குறிப்பிட்ட கைத்தறிஜவுளிரகங்களையொட்டி,பொதுவான ரகங்களான வேஷ்டி, சேலை போன்ற ரகங்களும் பொதுத் தேர்தலையொட்டி மார்க்கெட்டிற்கு வந்த குறைந்தவிலையுள்ள மில் ஜவுளி ரகங்களாலும் தேர்தலின் காரணமான பொது மார்க்கெட்டின் சுறு சுறுப்பற்ற தன்மையினாலும் மந்தநிலையடைந்திருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களின் நூல்பற்றுக்குறை போராட்டம் மற்றொரு முறை கிளம்புவதற்கு முன்னால் கைத்தறி ஜவுளி மார்க்கெட்டின் இன்றைய மர்மமான மந்த நிலையில் நாட்டின் பொருளாதார நலனுக்கேற்ற சமுகமான மாற்றம்தேவைப்படுகிறது. ஸ்ரீ ஹரி கிருஷ்ண மேதாப் அவர்களின் பார்லிமெண்ட் பேச்சிலிருந்து மத்திய மோட்டா ரகங்களை குறிப்பாக வேஷ்டி, சேலை ரகங்களை முன்பைவிட அதிக அளவில் தயாரிக்க மில்களுக்கு உத்திரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. பாகிஸ்தானிலிருந்து பருத்தி பெற வழியும் காணப்போகின்றனர். இத்துடன் அமெரிக்க தூதுவர் செஸ்டர் பௌல்ஸ், 250 கோடி டாலர் உதவித் திட்டத்தின் முதற்பாதிக்கு கோதுமையும் பருத்தியுமே பெரும் அம்சமாக இருக்குமென்று கூறியிருக்கிறார். இவையெல்லாம் குறிப்பாக கைத்தறி ஜவுளி மார்க்கெட்டிலும், பொதுவாக ஜவுளி மார்க்கெட்டிலும் புகுவதற்கு தயாராகிக்கொண்டிருக்கும் பிரச்னைகளாகும்!

நம் ராஜ்யத்தில் ஆட்சியைக் கைப்பற்றும் மக்கள் பிரதிநிதிகள் மக்களின் நல்வாழ்விற்கென

நாட்டின் சுபிட்சத்திற்கென வகுக்கும் திட்டத்தில், தென்னாட்டின் பழங்காலச் சிறப்புள்ள, லட்சக்கணக்கான உழைப்பாளிகளின் ஜீவியத்தொழிலாக உள்ள நாட்டு மக்களின் அத்யாவசிய தேவைப் பொருளாக இருக்கும் ஆடைப் பிரச்னைக்கும் குறிப்பாக கைத்தறி ஜவுளிப் பிரச்னைக்கும், அதற்கு அடிப்படையான போதிய அளவு நூல் வினியோகப் பிரச்னைக்கும் தங்களின் ஆட்சித்திட்டத்தில் இடம் பெற்றிருக்கவேண்டும். நம் ராஜ்யத்தின் தேவைப் படிக்கு நூல் கிடைக்க வழி வகுப்பதோடு, கட்டுப்பாடற்ற முறையில் மில் ஜவுளியின் திடீர்பிரவேசம் கைத்தறி ஜவுளியைப் பாதிக்காதவாறும், கைத்தறித் துணித் தேக்கமும், விலையின் எதிர்பாராத ஏற்றத்தாழ்வுகளும் பிரச்னையை மோசமாக்காதவாறு திட்டத்தின் அம்சங்கள் வரையறுக்கப்படவேண்டும். கைத்தறி ஜவுளி, நூல் வினியோகம் போன்ற பிரச்னை ஆராயவும், அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லவும், சமீபத்தில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஜில்லா கமிட்டி அமைப்புத்திட்டம் அரசாங்கம் கைத்தறியை மறக்க முடியவில்லையென்பதற்கு அறிகுறியாகும்.

கைத்தறித் துணிகளை விரும்பும் மார்க்கெட்டான ஆப்ரிக்கா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்ற ரகங்களை கூட்டுறவு உற்பத்தி விற்பனை ஸ்தாபனங்களையன்றி பொது உற்பத்தியாளர்களும் உற்பத்தி செய்வதற்கு பிரசாரக் கமிட்டி, ஆலோசனைக் கமிட்டி அமைப்பின் மூலம் கற்றுக்கொடுப்பதோடு, ஏற்றுமதிக்கான பிற வசதிகளும் தந்து உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். அந்த நாடுகளிலுள்ள நம் தூதவர், கான்செல்களின் மூலம் நம் கைத்தறி ஜவுளி ரகங்களில் உள்ள விரும்பத்தக்க அம்சங்களுக்கு கவர்ச்சிகரமான விளம்பரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அந்த நாடுகளை கைத்தறி துணிகளின் சிறந்த மார்க்கெட்டாக நிரந்தரப்படுத்த எல்லாவித சூழ்நிலையும் ஏற்பாடும் செய்ய முன்வரவேண்டும்.

உற்பத்தி செய்யும் நெசவாளர் விற்பனை செய்யும் வியாபாரி—விரும்பி வாங்கும் மார்க்கெட் இந்த முக்கூட்டுப் பிரச்னைக்கு சென்னை ராஜ்யத்தின் ஆட்சிப் பீடமேறப்போகும் மக்களின் பிரதிநிதிகள் தக்க திட்டம் வகுக்கத் தவறிவிட்டால் சீக்கிரமே அப்பிரச்சனை தீராத நோயாகி நம் நாட்டில் தலைவிரிகோலமாகப் பரவிவிட ஏதுவாகும்! பிறகு எளிதில் நிவாரண வழி காண முடியாமல் சிக்கலொன்று மற்றொன்றோடு போட்டியிட்டுப் பெருகி வளர்ந்து எல்லோருக்கும் தொல்லை தந்து நிலைமையை சீர்குலைத்து விடலாம்! ஆகவே, திக்குத்தெரியாத இந்த நிலைமையில் ஆட்சியில் அமரப்போகிறவர்களிடம் கைத்தறிப் பிரச்சனைக்குத் திட்டமுண்டா? ●

உத்திரவாதமான கெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கத்தாரால் அங்கீகாரம் பெற்றவர்கள்

வரதராஜ் & கோ

சாயத்தொழிற்சாலை

மீன்கரைரோடு, பொள்ளாச்சி.

காலண்டர்கள்வரபெற்றோம்

●

1. **பிரஞ்சு டைஸ் & கெமிகல்ஸ்**

ஸ்டாக்கிஸ்ட்:—

R. அம்போஜி ராவ் பான்ஸ்லே
சுக்ரவாரப்பேட்டை,
கோயமுத்தூர்.

2. **திங்களூர் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டி லிமிடெட்**
திங்களூர் P. O.
(பெருந்துறை வழி.)

3. **தி சிட்டி பிரிண்டர்ஸ்**
இடையர் வீதி.
கோயமுத்தூர்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ள்வோம்; இதில் மத்திய சர்க்கார் தலையிட்டால் நாங்கள் மூர்த்தண்யமாக எதிர்ப்போம்; அ. இ. டெக்ஸ்டைல் கொள்கைக்கு நாங்கள் உடன்பட மாட்டோம் என்பது தானே அதனுடைய உண்மையான கருப்பொருளாக இருக்க முடியும்?

அப்படியில்லையெனில் அகில இந்திய டெக்ஸ்டைல் கொள்கையை உருவாக்குவதில் இந்த ராஜ்ய சர்க்கார் தனது நலனை முதன்மையாக வைத்துக்கலந்துகொள்ளும், அதில் தோல்வியேற்பட்டால் சுயேச்சையான கொள்கையையே கடைப்பிடிக்கும் என்றுதானே வேறுவிதத்தில் எடுத்துக்கொண்டபோர்த்தாலும் அர்த்தமாகும்.

இரண்டுமில்லாமல் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியையும் மறந்து "போதுமான கோட்டா பெற்று நூல் பிரச்னையை சமாளிப்பது" என்றால் நேற்றுவரை கனம் பெருமாள்சாமி ரெட்டியார் செய்த வேலையையே வரப்போகும் புதிய மந்திரி சபையிலும் நாங்கள் செய்வோம் என அந்த வார்த்தை அர்த்தம் தருவதைவிடப் புதிதாக வேறு ஒன்றையுமே சொல்லக் காணோமே ஏன்? (தொடரும்)

ஈரோடு டிப்டி ரிஜிஸ்திராரின் செயல் சட்ட விரோதமானது!

கொளாநல்லி நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டி மண்டாமஸ் மனுவின்மீது சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு.

கோவை கலெக்டருக்கும், ஈரோடு கூட்டுறவு சொஸைட்டிகளின் டிப்டி ரிஜிஸ்ட்டிராருக்கும், சீனியர் இன்ஸ்பெக்டருக்கும் கொளாநல்லி நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரிக்கார்டுகளைத் திருப்பி கொடுக்கும்படியாகவும், மேற்படி சொஸைட்டி அங்கத்தினர்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்டு வந்த முறையிலேயே நூல் வினியோகம் செய்ய உத்திரவிடவேண்டுமெனக் கோரியும் சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஜஸ்டிஸ் சுப்பராவ் அவர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்ட மண்டாமஸ் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோவை ஜில்லாவைச் சேர்ந்த கொளாநல்லி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர்தான் மண்டாமஸ் மனுக் கொடுத்தவர்.

மனுவில், ஈரோடு கூட்டுறவு சொஸைட்டிகளின் டிப்டி ரிஜிஸ்திரார், கூட்டுறவு சொஸைட்டிகளின் சட்டம் 38-வது செக்ஷனின் கீழ் (மனுதாரருக்கு அறிவிக்காமலேயே) ஒரு விசாரணையைத் தொடங்கி நடத்தினர் என்றும், விசாரணைக்குப் பிறகு மேற்படி சொஸைட்டியின் டைரக்டர்களை சங்கப் பொதுக்கூட்டத்தைக் கூட்டும்படி கேட்டுக்கொள்ளாமல், டிப்டி ரிஜிஸ்திராரே சங்க மெம்பர்களின் கூட்டத்தை கூட்டினர் என்றும், சங்கத்தின் மூலம் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த நூலை நிறுத்திவிடும்படியும், சொஸைட்டி மெம்பர்களுக்கு தனித்தனியான நூல் பங்கீடு கார்டுகள் வழங்கும்படி டெக்ஸ்டைல் ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு உத்திரவிட்டாரென்றும், அத்தோடு சொஸைட்டியின் ரிக்கார்டுகளை எடுத்துக் கொண்டார் என்றும் கூறப்பட்டிருந்தது.

மனுவை விசாரித்த கனம் நீதிபதி, கூட்டுறவு சொஸைட்டிகளின் சட்டம் 38-வது செக்ஷனின் கீழ் கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் நடத்திய விசாரணை, 38-வது செக்ஷனின் நிபந்தனைகளைப் பூரணமாக அனுசரித்து நடத்தப்படவில்லையென்றும், எனவே, டிப்டி ரிஜிஸ்திராரின் விசாரணை சட்ட விரோதமானதென்றும் தம் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்

ரிக்கார்டுகளைப் பரிசீலனை செய்வதற்கு மட்டுமே டிப்டி ரிஜிஸ்திராருக்கு அதிகாரம் இருக்கிறதாகையால் அவர், சொஸைட்டியின் ரிக்கார்டுகளைப் பறிமுதல் செய்தது சட்டவிரோதமானதே என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுறவு சொஸைட்டிகளின் சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகையில் நூல் வினியோகம் சொஸைட்டியின் மூலமாகவேதான் சங்க அங்கத்தினர்களுக்கு இருந்துவர வேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பில் கூறினர். "ஹிந்து" 7–2–52

வருந்துகிறோம்.

"கைத்தறி" 15—9—51 தேதிய இதழில் "கலர் நூல் வினியோகத்திலுமா பாரபட்சம் காட்டப்படவேண்டும்?" என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்த கட்டுரையில் ஒரு பகுதி தன்னைப் பாதிக்கும் முறையில் இருப்பதாக உடுமலைப் பேட்டையைச் சேர்ந்த நூல் வியாபாரி திரு. வி. அப்பாவு நம் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்.

மேற்படி கட்டுரை, கலர் நூல் அலாட்மெண்டில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டிப் பரிகாரம் தேடும் நோக்கத்துடன்தான் எழுதப்பட்டது. எந்தத் தனி நபரையும் அவமதிக்கும் நோக்கம் அக் கட்டுரைக்கு இல்லை.

அக் கட்டுரையின் அடிப்படையான கருத்து—முழு நோக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்கு கட்டுரை முழுவதையுமே படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமே தவிர, கட்டுரையின் ஒரு பகுதியை மாத்திரம் படித்துவிட்டுக் குறைகூற முன்வருவது முறையானதாக இருக்காது என்றே நாம் நினைக்கிறோம்.

மேலே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள அக் கட்டுரையில் திரு. அப்பாவு தன்னைக் குறிப்பதாகச் சொல்லப்படும் பகுதி, கலர் நூல் அலாட்மெண்டில் காட்டப்பட்டுள்ள பாரபட்சத்திற்குப் பலரால் கூறப்படும் புகார்கள் உண்மையாகவும் இருக்கலாம், அல்லது பொய்யாகவும் இருக்கலாம், நமக்கு அதைப் பற்றிக்கவலையுமில்லை என்று சந்தேகத்திற்கிடமின்றி — தெளிவாக நாம் கூறியிருப்பதை அவருக்கு எடுத்துக்காட்டுவதுடன், அவர் அதை தவருகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும் என்றே கருதுகிறோம்.

எனினும், அவர் தன்னைப் பாதிக்கும் முறையில் அக் கட்டுரையின் அப்பகுதி இருப்பதாக எடுத்துக் காட்டுவதால் அம்மாதிரியான எண்ணம் அவருக்கு ஏற்படுமாறு இருந்த வாசகங்களுக்காக நாம் வருந்துகிறோம். —ஆசிரியர்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உற்பத்தி செய்யும் சரக்கானது அதன் நயத்துக்கும் நீடித்த உழைப்புக்கும் உத்தரவாதமுள்ளது. பொதுமக்கள் இச் சரக்குகளை, பற்ற வெளியார்களின் சரக்குகளைப்போல் அல்லாமல், நம்பிக்கையுடன் வாங்குகின்றனர். கூட்டுறவு சங்கங்களைப் போலவே நல்ல சரக்குகளைத் தயார் செய்யும் சில தனி வியாபாரிகளும் இந்த ராஜ்யத்தில் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கமெம்பருக்கு, வருஷ இறுதியில், அவர் செய்த வேலைக்கு ஏற்ப, சங்க லாபத்திலிருந்து போனஸ் வழங்க உதவுவான் வேண்டி ராஜ்ய சங்கமும் அங்க சங்களுக்கு, அவற்றினிடம் வாங்கிய சரக்கு மதிப்பின் பேரில், போனஸ் வழங்குகிறது.

இவ்வாறாக, சென்ற 16 வருஷங்களாக நடைபெற்றுவரும் நமது ராஜ்ய நெசவுசங்கமானது, இந்த ராஜ்யத்திலுள்ள தறிகளில் 30 சதவிகிதத்தை தனது ஆதரவின்கீழ் இதுவரை கொண்டுவந்துள்ளது. இவற்றின் வருஷ உற்பத்தி மதிப்பு ரூ. 9.2 கோடிக்குப் பக்கமாகிறது. ராஜ்ய சங்கத்தின் 1950—'51 வருஷ வியாபாரமானது பின்கண்டவாறு இருந்தது:—

வாங்கிய நூல் விலை ரூ. 512 லட்சம். நூல் விற்பனை ரூ. 510 லட்சம், வாங்கிய நெசவுச் சரக்கு ரூ. 151 லட்சம். விற்ற சரக்கு மதிப்பு ரூ. 151 லட்சம்.

ராஜ்ய சங்கம் இன்று ரூ. 504 லட்சம் க்ஷேமநிதியும், 4.2 லட்சம் பங்குத் தொகையும் உடைத்தாயிருக்கிறது. வியாபாரத்தை அனேகமாய் வெளி உதவியின்றி செய்துவந்திருக்கிறது. சென்னை ராஜ்ய கூட்டுறவு பாங்கில் மட்டும் ரூ. 21 லட்சம் கடன் உதவி பெற்றிருந்தது. சொந்த நிதி தவிர இதர நிதிவசதியை அதன் சொந்த சொத்து ஈட்டின் பேரில் பெற்றுள்ளது.

நெசவாளரின் நூல் தேவையை சமாளித்தல்

பல கஷ்டங்களைச் சமாளித்து ஈடேற முடியுமா என்பது கைத்தறித் தொழிலின் முக்கிய பிரச்னையாயிருக்கிறது. பல விஷயங்களைப் பொருத்து இதன் வெற்றி அமையவிருப்பதாகும். முதலாவதாக, மில்களை நம்பி இத்தொழில் வாழவேண்டியதாகிறது. இந்தமில்கள், இக்குடிசைக் கைத்தொழிலை, போட்டி மனப்பான்மையுடன் சந்தேக எண்ணங்கொண்டு பார்ப்பதால், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு வேண்டிய நூலை கடைசிப் பட்சமாகத்தான் ஒதுக்கிவருகின்றன. நம் நெசவாளர்களே தங்களுக்குத் தேவையான நூலை சொந்தமாகவே தயார் செய்துகொள்ள முடியாதா என்னும் பிரச்னை இதிலிருந்து எழுவதாகிறது. கைராட்டினத்தால் நூலை நூற்று வேலை செய்வதன் பலாபலன் லாபகரமானதாயில்லை. சர்க்கா மூலம் ஒருவர் ஒரு ராட்டையில் நூல் தயாரிப்பதால், என்ன அபிவிருத்தியான முறையாயிருந்தபோதிலும், ஒரு நாளைக்கு அவர் தயார் செய்யும நூலின் கிரயம் 8 அணாவாகிறது. அதே நூலின் மில் வாசல் விலை 3½ அணா ஆகிறது. ஆனது பற்றி நெசவாளியானவர், சொந்த நூல் தயாரித்தலை ஒரு ஓய்வுகால அம்சமாகக் கூட மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது. நமது கைத்தறி நெசவுத் தொழிலுக்குத் தேவையான நூலை குடிசைக் கைத்தொழில் முறையில் தயார் செய்யலாமா என்னும் கேள்வி ஈண்டு எழுகிறது. 1200 கதிர்கள் கொண்ட நூல் நூற்பு யூனிட் நிறுவுவதுபற்றி யோசனைகூறப்படுகிறது. குடிசைக் கைத்தொழில் முறையில் மேற்படியந்திரத்தால் நூல்நூற்பதில், பெரிய அளவில் உள்ள யந்திரசாலைகளில் நூல் தயார் செய்வதில் உள்ளதுபோல், சிக்கனமான அளவில் நூல் தயாரிக்கலாம் என சொல்லப்படுகிறது. மேற்படி யந்திரம் நிறுவ யூனிட் ஒன்றுக்கு சுமார் ரூ. 1½ லட்சம் செலவாகும். இதனுடைய பலாபலன்கள்பற்றி உறுதியாய் எதுவும் முன்கூட்டியே சொல்வதற்கில்லையெனினும், இந்த முயற்சியை பரீட்சார்த்தமாக செய்துபார்ப்பது வரவேற்கப்பாலதாகும். ஆனால் அவ்வாறு செய்தால், சர்க்கார் இதில் தயாராகும் நூலை, தங்கள் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவராமலும், இதற்குத் தேவையான பருத்தி சப்ளையைப் பொருத்து இது விஷயமாய் உள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்தியும் சலுகை அளிக்கவேண்டும். அடுத்தபடியாக நாம் செய்யக்கூடிய முயற்சி, கூட்டுறவு நூல் மில் ஏற்படுத்துவதுபற்றியதாகும். குண்டக்கல்லில் 11,000 கதிர்கள் கொண்ட ஒரு கூட்டுறவு நூல் மில் இந்த ராஜ்ய கூட்டுறவு நெசவு சங்கத்தின் ஆதரவில் அமைக்கப்படுவதானது நம் ராஜ்யத்துக்கு பெருமையளிப்பதாகும். இந்த ராஜ்யத்தின் தென் பகுதிக்கு இதுமாதிரி ஒரு நூல்நூற்பு மில் ஏற்படுத்துவது பற்றிய ஆலோசனை ஒன்று இருந்துவருகிறது. இதுபோன்ற மில்களின் எதிர்காலம் பற்றி ஒரு சாராரிடையே அவ்வளவு நம்பிக்கை இல்லை. கூட்டுறவு முறையில் மேற்கொண்டும் நூல் மில்கள் அமைக்கப்படலாம். இந்த மில்கள் தயாரிக்கும் நூலை கூட்டுறவு சங்கங்களுக்குச் சேர்ந்த கைத்

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்;
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு—ஈரோடு.

தறிகளுக்கு விநியோகிக்க சர்க்கார் அனுமதியளித்தல் அவசியம்.

திட்டமான துணி ரகங்களின் அவசியம்

கைத்தறி நெசவுத்தொழிலுக்கு வேண்டிய நூல்பிரச்னையானது மேற்கண்ட வகையில் ஒருவாறு சரிக்கட்டப்படலாம். ஆனால், மில் துணிகளின் போட்டியை சமாளிக்கும் பிரச்னை மட்டும் இந்தக் கைநெசவுத் தொழிலுக்கு எப்படியும் இருந்துவரும். கைத்தறித் துணி ரகங்கள் தயாரிப்பதில் ஒரு திட்டமான முறை கைக்கொள்ளப்படாதவரை மேற்படி பிரச்னை இருக்கத்தான் செய்யும். அனேக உற்பத்தியாளர்கள் மார்க்கெட்டில் வெளியிடும் சரக்குகள், எந்த ஒரு குறிப்பிட்ட மாதிரிக்கும் பொருத்தமானதாக இல்லை. ஆனால் ஒவ்வொரு கூட்டுறவு நெசவுசங்கமும் ஒவ்வொரு குறிப்பிட்ட மாதிரி சரக்கைத் தயார் செய்து வருகிறது. எல்லா கூட்டுறவு சங்கங்களும் ஒரே மாதிரி தினுசு சரக்கு தயார் செய்வதென்பது சுலப சாத்யமல்ல. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகக்கூடிய லுங்கிகள், கைக்குட்டைகள் போன்ற தினுசு சரக்குகள் தயாரிப்பதில் ஒரே ரீதியான கொள்கை இச்சங்கங்களால் பின்பற்றப்படுகிறது. நெசவாளிக்கும், இவைகளை நெய்வதால் நல்லகூலி கிடைக்கிறது. அதனால் அவர் உற்சாகத்துடன் இந்த சரக்குகளைத் தயார் செய்கிறார். யந்திர சகாப்தம் வலுப்பெற்றுள்ள இக்காலத்தில், கைத்தறி நெசவாளியானவர் பழைய மாதிரியான குழித்தறியிலும் அல்லது பிரேம் தறிகளிலும் அல்லது மிஷின் தறி என்று சொல்லப்படும், ஒரு அளவுக்கு தானே இயங்கக்கூடிய தறிகளிலும், வேலை செய்து வருகிறார்கள். சிறிய அளவில் உள்ள நூல் நூற்கும் யந்திர சாதன யூனிட்டுகளை குடிசைக்கைத்தொழில் முறையில் அமைத்தோ அல்லது கைத்தறி நெசவாளர்களுக்கென பிரத்யேகமாய் நூல் தயாரித்து விநியோகிக்கும் உரிமையுடைய நூல்நூற்பு மில்களை கூட்டுறவு முறையில் துவக்கியோ, குடிசைக் கைத்தொழில் முறையில் கிராமங்களில் மின்சாரத்தால் இயங்கும் விசைத்தறிகளை வைத்தோ நடத்தினால், துணி உற்பத்தியை கணிசமான முறையில் பெருக்கலாம்.

விசைத்தறிகளும் கைத்தறிகளும்

மேற்கூறியவாறு விசைத்தறிகள் ஏற்படுத்துவதால், இப்போதுள்ள சாதாரண தறிகளை நீக்கிவிடுவதாக ஆகாது. ஏனென்றால் சில குறிப்பிட்ட ரக சரக்குகள் சாதாரண கைத்தறியால்தான் தயாரிக்கமுடியும். மார்க்கெட்டில் இவற்றிற்கு கிராக்கி அதிகம். விசைத்தறிகள் மூலம் நெசவுத்தொழிலில் ஏற்படும் சில வீண் நஷ்டங்கள் களையப்பட்டு சரக்கு தயாரிப்புச் செலவுகள் குறைய வழிவகைகள் இருக்கின்றன. ஊடை அளவு அதிகமானதாக ஏற்படுத்துவதால் நெசவில் ஏற்படும் சேதாரம் முதலிய நஷ்டங்கள் தவிர்க்கப்படலாம். உற்பத்தி பத்து மடங்கு அதிகரிக்கவும் உற்பத்திச் செலவு கால் பாகம் குறையவும் இதனால் முடிகிறது. சரக்குகளும் குறிப்பிட்ட தினுசுப்படியும் அகல அளவுப்படியும் தயாரிக்கலாம். காடா. வேஷ்டி, விரிப்புகள் இதர தினுசு சரக்குகள் போன்ற மில் சரக்குகளைப் பொருத்து கைத்தறிகள் கடுமையான போட்டியை எதிர்க்க வேண்டியிருக்கிறது. விசைத்தறிகளில் மேற்படி சரக்குகள் தயாரித்தால் அவைகளின் தரமும், விலையும் மில்களில் தயாரிக்கும் சரக்குகளுக்கு ஏற்றாப்போலவே இருக்கும். இவைகளை விசைத்தறிகள்மூலம் தயாரித்துக் கொண்டு, கைத்தறிமூலம் சித்திர வேலைப்பாடுள்ள, உயர்ரக பார்டர்களும், பலவர்ண வேலைப்பாடுகளும்கொண்ட துணிகளை நெசவாளி தயாரிப்பதால் தனது கைத்தறி நெசவு வேலைக்குக் குந்தகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம். இம்முறையை மேற்கொள்வதால், நம்நாட்டு நெசவுத் தொழிலானது புதுப்பூசலுடன் இயங்கி, முன்னேற வழிகோலுவதாக ஆகும். கைத்தறி நெசவுத் தொழிலின் நிலைமை கவலைதரும் பிரச்னையாய்விட்டது. கூடிய சீக்கிரம் இதவிஷயமாய் மேற்கூறிய வகையில் ஓர் முடிவுகாணவேண்டியது அவசியமாகிறது.

("கூட்டுறவு" 1—2—'52)

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும் அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள், துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்.

"உழைக்க சம்மதிக்காத உலுத்தனல்ல! வேலைக்கு வளையாத வீணனல்ல! சுகபோகத்திலே காலங்கழிக்க எண்ணும் சோம்பேரியல்ல!" ஆனாலும் அவன்........

அந்தமான் கூலி

— ச. குணவரசு, அருப்புக்கோட்டை. —

அன்று, எங்கும் கும்பிருட்டு. மழை வேறு லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. பூமியின் ஈரம் எளிதான வழுக்கல் சேற்றையும் உண்டுபண்ணியிருந்தது. திரள் திரளாகச் சூழ்ந்திருக்கும் கார்மேகக் கூட்டங்களின் முற்றுகை, இடையிடையே உறுமிக் கொண்டிருந்தன! திருடரும் கூடத் துணிவதற்கு அஞ்சக்கூடிய, பயங்கரமான மசான அமைதி எங்கும் நிலவியிருந்தது!

காற்றின் சலசலப்பு, தூற்றலின் ஒலி, உறுமும் மேகத்தின் ஓசை இவைகள் தவிர, வேறு எந்த ஓசையும் கேட்காத, அந்த நடுநிசியிலே, உற்று நோக்கினால், ஒரு தனி மனிதனின் காலடி ஓசையும் சேர்ந்து கேட்கத் தொடங்கியது!

ஆம்!

நன்றாகக் கேட்கிறது! கிள்ளிவிட்டுக்கொண்டே நிற்க முடியக்கூடிய அளவு கருமை சூழ்ந்திருக்கும் இருளிலே ஒரு மனிதனின் காலடி யோசையும் கேட்கிறது. மேலும் சற்று கவனித்தால், தாளம் போடுவதைப் போன்று, கணக்காக அடி எடுத்து வைக்கும் பாதங்களின் ஓசையினின்று, அவன் யார்? என்பதும் நன்றாகத் தெரிகிறது.

நடுநிசியிலே நாட்டைவிட்டுக் கடந்து கால் நடையாகச்செல்கிறான். கள்ளர்கள் பயமோ, கடும் விஷங்களைத் தாங்கித் திரியும் கொடும் பிராணிகளின் பயமோ, சாத்தான், பேய் பிசாசுகளின் பயமோ அவனுக்கு இல்லை! ஏன்? அவைகளைக் காட்டிலும் பயங்கரமானவைகளை-கொடுமைப்படுத்தும் குணமுடையவர்களிடம் அல்லவா அவன் அனுபவித்து விட்டுச் செல்கிறான்!

தனது பிள்ளைகளை — மழலை மொழியால் பிஞ்சுத் தமிழைக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசித் தன்னை மகிழவைத்த, பத்தரைமாற்றுத் தங்கச்சிலைகளைப்போன்ற அருமைக் குழந்தைகளை விட்டு— வேலைக்கோ, வேறு அலுவல்களுக்கோ வெளியே சென்றிருக்கும்போது, 'எப்போது வருவாரோ' என்று தன்னை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் அன்பு மனையாளை விட்டு — வீட்டை விட்டு — தன்னைப் பெற்ற பொன்னாட்டை விட்டு — துறந்து செல்கிறான்! ஆனால் துறவியாக அல்ல! ஆஸ்தியின்றி அனாதையாகச்செல்கிறான், ஆனால் அகதியாக அல்ல! கடும் இருட்டில் கடுகி நடக்கிறான், ஆனால் களவாடுவதற்காக அல்ல! ஊரை விட்டுத் தப்பித்துச் செல்கிறான், ஆனால் உதைக்கும் சிறைக்கும் பயந்து ஓடித் திரியும் கைதியாக அல்ல! அன்னை நாடு கடந்து அயல்நாடு செல்கிறான், ஆனால் மக்களை ஏமாற்றி மோசஞ் செய்து நாசம் பல புரிந்ததால், நாடு கடத்தப்படும் தேசத் துரோகியாக அல்ல!

நால் பஞ்சம் என்ற கொடும் இரும்புப் பிடியினால் நசுக்கப்பட்டு, நைந்து, ஒடிந்த உள்ளத்தோடு நாட்டை விட்டுக் கடந்து செல்கிறான், ஓர் ஏழை நெசவாளி! 'பொன்னன்' என்பது அவன் பெயர்.

தரித்திரம், எத்தனை விதமாகத் தாண்டவமாடும் என்பதைத் தன் வாழ்க்கையில் நன்கு அனுபவித்தவன்! பஞ்சம், படர்ந்து பின்னிக் கிடக்கும் தாமரைக் கொடிகளைப் போல், அவன் வாழ்விலே பின்னிக் கிடந்தன!

இருந்தாலும்........?

உழைக்கச் சம்மதிக்காத உலுத்தனல்ல! வேலைக்கு வளையாத வீணனல்ல! சுகபோகத்திலேயே காலங் கழிக்க எண்ணும் சோம்பேறி அல்ல!

அவன் கைகள், கடலின் அலையை—கானகத்தின் வனப்பை—மடலின் அழகை—மாப்பிஞ்சின் அமைப்பை—மாதர் முகத்தோடு போட்டியிடும் தாமரையின் வடிவத்தை—கடலிலே குளித்து கரையிலே உலர்த்தி, மன்னர்களின் முடியிலே, அவர்தம் மார்பிலே தவழும் முத்துச் சரத்தின் முகப்பிலே பதிந்த எழிலை............! இன்ன பிற காட்சிகளை, பல வர்ண நிறத்தோடும் மனதைப் பறித்திடும் அழகோடும் வேட்டியிலே, சேலையிலே, வேறு பல துணிகளிலே, பேட்டுருவாய்க் காட்டுகிறது அந்த நெசவாளியின் கரங்கள்!

அத்தகைய கலையறிவு பெற்றிருக்கும் கைத்தறி நெசவாளி! கற்பிளந்து சிலை செதுக்கும் சிற்பியின் கைத்திறனுக்கு நிகராகக் கூர்த்த மதி பெற்றிருக்கும், அந்த ஏழை நெசவாளி........! படித்தவர்களால் பராமுகமாக்கப்பட்டு — பணக்காரர்களால் பழி வாங்கப்பட்டு — ஊராள வந்தவர்களால் உதறித் தள்ளப்பட்டு — பட்டினியால்

பயமுறுத்தப்பட்டு — வறுமையால் வாட்டப்பட்டு — வேலையில்லாக் கஷ்டத்தால் வீழ்த்தப்பட்டு — தாய்நாட்டை விட்டு—சேய் காட்டும் சிரிப்பின் ஒலியை விட்டு — சிந்தை களிக்கச் செய்த சேயிழையின் சேவல் விழியை விட்டு — கை அறுபட்ட கரி வீரன் கைவீசிய வேலைப் புக்தாங்கி, வீறிட்டோடும் வேதனைப்பட்ட நெஞ்சோடு, வேகமாக நடந்து செல்கிறான், கப்பல் துறை நாடி! கடல் தாண்டி நாட்டைக் கடக்க, அவன் கால்கள் கலம் நிற்கும் துறை நாடி நடந்தன!

ஃ ஃ ஃ

ஏழைக்கைத்தறி நெசவாளி பொன்னனின், கால்கள், தூத்துக்குடி துறைமுகத்திலே வந்து நின்றன. அவனுக்கு அறிமுகமில்லாத பலர், பஞ்சை மக்கள், கூட்டம் கூட்டமாக இருந்தனர். அவர்களுடன் பொன்னனும் ஒன்றுசேர்ந்தான்.

ஆங்கிலேய உடையணிந்த ஒருவர், அந்தமான் தீவுக்குக் கூலியாகச் செல்ல வந்திருக்கும் அவர்களை ஒவ்வொருவராக, பெயர், தெரு, ஊர் ஆகிய முழு விலாசங்களையும் பதிவு செய்து கொண்டு கப்பலில் ஏற்றினர்.

சிங்களம், சாவகம், கடாரம் முதலிய நாடுகளை வென்று அந்நாட்டரசர்களை சிறைப்பிடித்து வரும்போ நட்டு, கொடுவாளும் கூர்வேலும், குறிபடு வாரியும், கொடிய வில்லும் ஏந்தி, ஆர்ப்பரிக்கும் வீரர்களைத்தாங்கிய போர்க்கப்பல்கள் நின்ற தமிழகத் துறைமுகங்களிலே—பஞ்சையாய், பராரியாய், வாழ வகையற்றவராய், பாழ முடியாதவராய் உள்ள, தமிழக ஏழை உழைப்பாள மக்களை—அடர்ந்த மரங்களும் அதைச்சூழ்ந்த செடி கொடிகளும் அதில் வாழும் கொடிய விலங்குகளும், அவை பதுங்கப் புதரும் புறவுமுள்ள, அந்தமான் தீவுக்குக் கூலிகளாக ஏற்றிச் செல்ல இருக்கும் கப்பல்கள் நின்றன!

அந்தக் கப்பலில் மேல் தட்டில் ஏற்றப்பட்டான், ஏழை நெசவாளி பொன்னு. தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து, அந்தமான் தீவு நோக்கிக் கிளம்பியது கப்பல். பொன்னனின் கண்கள், கரை மறையும்வரை கடலை ஒரு முறையும், கரையை ஒரு முறையுமாக மாறி மாறிப் பார்த்தன. அவன் நெஞ்சு விம்மி விம்மிப் பெருமூச்சு விட்டது; ஒருமுறை அவன் உடலிலே ஒரு சிறு நடுக்கமும் ஏற்பட்டது; அந்த நடுக்கம், ஆழிய கடலில் விரைந்துசெல்லும் கப்பலின் வேகத்தினாலா? பரந்த கடலில் எழுந்தெழுந்து விழும் அலைகள் வீசும் சீதளக்காற்றினாலா? குமரியிலே முத்தும், கொடுமுடியில் உறைபடு கோளும், விலை யுயர் வேழமும், மணந்தருமகில், இணைதர முடியாத் தேக்கு, இதர வளந்தரு பொருள் விளை மலையும், தஞ்சையிலே நெல்லும், தங்கம் விளை நிலனும் கொண்ட தமிழகம்! தன்னைப் பஞ்சையாக்கி கஞ்சிக்கு வழியின்றி, கடல் கடந்த தேசத்தில், தமிழன் கூலியாகத் திரிவதைக்கண்டிருந்தும், காணாததுபோல் இருக்கிறதே! என்று, எண்ணியெண்ணி ஏங்கியோ.......? அல்லது இடர் வந்துற்ற போதும் இன்பமளிக்கும் தனதன்பு மொழியாளிடம், ஏதுங்கூறவில்லையே, என்ன நினைப்பாளோ, தன்னைக் காணாமல் எங்கெங்கு தேடுவாளோ, எத்துணைத் துயருறுவாளோ, எவ்வளவு சஞ்சலப்படுவாளோ என்று கருதியோ....! எப்படியென்று தெரியவில்லை, அவனுக்கு ஏற்பட்ட, அந்தச் சிறு நடுக்கம்?

ஃ ஃ ஃ

பொன்னன் ஓர் ஏழை.. இல்லை! ஏழையாக்கப்பட்ட கைத்தறி நெசவாளி. சாதாரண நடுத்தர வகுப்பினரைச் சார்ந்தவன்; நல்ல முறையிலே வளர்ந்தவன்; நாணயமாக வாழ்ந்தவன். அவனுக்கு 'பொன்னி' என்ற—' 'பொன்னம்மாள்' என்பது பெயர்; பொன்னியென்றே அழைப்பது வழக்கம்.—பணி மொழி மனைவி இருந்தாள். இவர்கள் காதலின் அடையாளங்களாய், எதிர்கால சின்னங்களாய் இரு குழந்தைகளும் இருக்கின்றன. இடையூறிலாது, இனிதே வாழ்வு நடாத்தினர்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

No. A. 1601, **ஸ்ரீவில்லிப்புத்தூர்**

பொதுமக்களின் நலனே குறிக்கோளாகக்கொண்டு உடுக்கமெல்லியதும் கவர்ச்சிகரமான பேட்டு
திணுசுகளிலும், வேட்டி துண்டு ரகங்களும் எல்லா அகலங்களிலும்
காடா பீசுகளும் ஏராளமாகத் தயாரிக்கிறோம்.

கல்கத்தா மார்க்கெட்டுக்கு ஏற்ற 20s & 40s நூலில் 2x9 2x10 ஜோடி ரகங்கள் கைவசம் உள்ளன. மொத்தத்தேவைக்கு எழுதுங்கள். முன் ஒப்பந்தம்செய்து கொள்ளலாம்.

தற்சமயம் விலைமிகவும் குறைத்துள்ளோம்! **தேவைக்கு எழுதுங்கள்!!**

A. K. ஞானியார், செயலாளர். P. குருசாமி, தலைவர்,

சமீப காலத்திய — அதாவது சில ஆண்டுகளாக நாட்டிலே, கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்ட இன்னல்கள், ஓர் நிலையான நிலைமை இல்லாததனால் ஏற்பட்ட நெருக்கடிகள் — சமாளிக்க முடியாத துணித் தேக்கங்கள், ஆகியவைகளிற் சிக்குண்டு, திக்கித் திணறித் தடுமாறித் தள்ளாடி, கைத்தறி நெசவுத் தொழில் நகர்ந்து கொண்டிருக்கிறது. வேல் பட்ட இடத்திலே வெட்டுப் பட்டதைப்போல, சால் புண்ணிலே சீழ் வடியும் வேதனையையும் தாங்கிக்கொண்டு தள்ளாடி நடந்து வருபவன் மீது சீமானின் கார் மோதிவிட்டுச் செல்வதைப் போல, மழையில்லாமல் வாடிக்கொண்டிருக்கும் பயிர் மீது வெட்டுக்கிளி பாய்ந்து அவைகளையும் பாழாக்குவதைப்போல, திடீரென்று தோன்றியது நூல் பஞ்சம்! அதன் காரணமாய், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையில், பசியும் பட்டினியும் படையெடுத்தன! வறுமையும் நோயும் அவர்களை வளைத்துக்கொண்டன! எங்கும் ஒரே சோகக் குரல்கள் எழும்பின! சிலர், பழைய சொத்துக்களை இழந்தனர்! பலர், நகைநட்டிழந்தனர்! பலர், காடு கழனிகளை இழந்தனர்! கட்டிய வீட்டைக் கடன்காரன் பிடுங்கிக்கொள்ள, கண்ணீரைக் கொட்டிக்கொண்டு வெளியேறினர் பலர்! பெற்ற மக்களைத் துறந்தனர் சிலர்! பிரிய மனைவியைப் பிரிந்தனர்! கொட்டும் பனியில் குளிரால் நடுங்கி, பசியால் தடித்துக்கொண்டிருக்கும் குழந்தைகள்! அதைக் கண்டு பசி போக்க முடியாமல், மனம் பொறுக்க முடியாமல், பெற்றோரின் நெஞ்சு பதறும்! இருக்கும் கஞ்சியை கணவனுக்கு வார்த்து விட்டு, கடைசியில் உள்ள கஞ்சித் தண்ணீரை மட்டும் தான் பருகிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் ஏராளம்....!

ஃ ஃ ஃ

இத்தகைய சோகக் காட்சிகள், மனதை உருக்கும் நிகழ்ச்சிகள் கதையோ, கற்பனையோ அல்ல! கைத்தறி நெசவாளர்களின் வாழ்வில், இன்னுங்கூட அனுதினமும் அனுபவிக்கும் வேதனைகள்! இந்த நிலைகள் பொன்னிக்கும் பொன்னனுக்கும் மட்டும் விதிவிலக்கா, என்ன? இல்லையே! அவர்களையும் சூழ்ந்துகொண்டது; விற்க முடிந்ததை எல்லாம் விற்றுப் புசித்தாகி விட்டது. வறுமை வாடுவதாக இல்லை!

பொன்னன், சிறு பிள்ளையிலிருந்து சில முரட்டு வேலைகளையும் செய்யக் கற்றிருந்தான். ஒருவன் காட்டிலிருந்து ஒரு விறகுக் கட்டைச் சுமந்துகொண்டு வந்தான். பொன்னன் கண்டான்; அவன் தோள்கள் தினவெடுத்தன; காடுகளில் உள்ள பட்ட மரங்களின் கிளைகளை வெட்டிக்கொணர்ந்தான்; அன்று உணவுக்குக் கிடைத்தது; மறுநாளும் சென்றான்; சில நாட்கள் இவ்விதம் வாழ்வு நடாத்தினான்.

ஒருநாள், கழுத்து வலிக்க ஒரு விறகுக் கட்டைச் சுமந்துகொண்டு வந்தான் பொன்னன். 2, 3 போலீஸ்காரர்கள் எதிரே வந்து விறகுக் கட்டைப் பறிமுதல் செய்தது மட்டுமல்ல! ரோட்டில் இருக்கும், அரசாங்கத்திற்குச் சொந்தமான மரங்களைத் திருட்டுத் தனமாக வெட்டி, விற்றதாகக் கைது செய்தனர். வெளியே வரும்போது, "திருடன்" என்ற புனைப் பெயரோடு வந்தான் பொன்னன். கொடிய நோயாளிகளைக் கண்டு ஒதுங்கிச் செல்வதைப்போல, மக்கள் சமுதாயம் அவனைக்கண்டு ஒதுங்கி நடந்தது; வெறுத்தது. சந்தேகக் கண் கொண்டு நோக்கியது. பொன்னனுக்கு மேலும் மேலும் சங்கடங்கள் வளர்ந்து கொண்டேயிருந்தன! எத்தனையோ இரவுகள், வீட்டைத் துறந்து தெருக் கடைசி வரை செல்வான்; திரும்பி வருவான். சிலசமயம் ஊர்க்கடைசி வரை செல்வான்; அவ்வளவுதான்; மறுபடியும் திரும்பிவிடுவான். தனது மக்களின் மழலை மொழி, பாசம் அவனை வேறு முடிவுக்கு வர தடுத்துக் கொண்டேயிருந்தன!

ஒருநாள், சாப்பாட்டிற்கு ஒன்றுமே இல்லை சகிக்க முடியாத வறுமை! அழும் குழந்தைகளின் கண்ணீர் பொன்னனின் உள்ளத்தை உருக்கியது. பொன்னியின் கழுத்தில், தங்கள் இருவரையும் பிணைத்து வைத்த சின்னம் மின்னிக்கொண்டிருந்தது! பொன்னனின் வாடிய முகத்திலிருக்கும் கண்கள், அதைக் கூர்ந்து நோக்கின. நோக்கமறிந்து உடனே கழற்றிக்கொடுத்தாள் பொன்னி!

அன்று நடுநிசியில் பொன்னியும் தனது அருமை மக்களிருவரும் உண்ட மயக்கம் தீர உறங்கிக்கொண்டிருந்தனர்; எழுந்தான் பொன்னன். எண்ணினான். "எல்லாவற்றையும் விற்றுவிட்டோம்; இனி எப்படிப் பிழைப்பது? எங்கு சென்றாகிலும் என்ன வேலை செய்தாகிலும் வாழவேண்டும்; வளமாக அல்ல! வயிற்றைக் கழுவுவதற்காக; உயிர் சாகாமல் இருப்பதற்காக, வாழவேண்டும்." என்று நினைத்தான். "அந்தமான் தீவிற்குக் கூலிகள் தேவை" என்ற அறிக்கை அவன் நினைவிற்கு வந்தது. 'மனைவியிடம் கூறினால் மறுப்பாள்' என நினைத்தான். இன்பக் குழந்தைகளையும் எழில் மனையாளையும் சில நிமிஷ நேரம் மாறிமாறிப் பார்த்தான். அயர்ந்து தூங்கும்பொழுதும் ஒளி வீசும் பொன்னியின் செந்நிற முகத்தில்—வாழ்விலும் தாழ்விலும், வறுமையிலும் பெருமையிலும் வற்றாத இன்ப ஊற்று விளங்கியது. அவன் ஆற்றிய பணியின் அருமை, படர்ந்து கிடந்தன! அந்த அன்புப் பணி! அவனைத் தடுத்து நிறுத்தி

யது; இதுவரையும் அனுபவித்த இன்னல்கள்—கடைசிப் பொருளையும் விற்றுவிட்டு, செலவு போக மீதி வைத்திருக்கும் இருபது ரூபாயும் தீர்ந்து விட்டால்...? மறுபடியும் வறுமை வெள்ளம் அடித்துக் கொண்டு சென்று விடுமே! அல்லலுக்கும் அவதிக்கும், ஏச்சுக்கும் பேச்சுக்கும் இதுவரை ஆளாகி, அலைந்து திரிந்து, சாகும் துன்பத்தைச் சகித்துக்கொண்டிருந்த அவன் நெஞ்சு, சம்மதிக்கவில்லை! அவன் பட்ட துன்பங்கள் அத்தனையும் சேர்ந்து வந்து பயமுறுத்தின! போ! போ!! எனத் துரத்தின! ஏழை மீது சண்டோட்டம் இல்லாதார் ஆளும் நாட்டை விட — கால் வயிற்றுக் கூழுக்கும் கதியற்ற நாட்டில் வாழ்வதை விட—கொடும் புலிகள் வாழும் காடு நன்று! கொடும் விலங்கினங்களின் கூட்டம் திரியும் காடுகள் நன்று!! என்ற முடிவுக்குவந்தது அவன் இதயம்.

பொன்னனின் கண்களிலிருந்து நீர் வடிந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் தரையில் விழுந்து சிதறின! அடி வயிற்றிலிருந்து கிளம்பியது ஒரு பெருமூச்சு! வீட்டை விட்டுக் கிளம்பினான். விடிவதற்குள் ஊரைத் தாண்டிவிட வேண்டும் என்று வேகமாக நடந்தான்.

காதல் மகளிரின் இருண்ட குழல்களைப் போன்ற, மெல்லிய நூல் இழைகளிற் பழகிய, அவன் கண்களுக்கு, மையிருட்டுச் சூழ்ந்திருக்கும் அந்தக் கோரமான இரவிலுங்கூடப் பாதையின் வளைவுகள் நன்றாகத் தெரிந்தன. குளிரின் நடுக்கம், கோளின் குமுறல், இருளின் பயங்கரம் இத்தனையையும் துச்சமென மதித்து நடந்து செல்கிறான் பொன்னன்.

ஃ ஃ ஃ

ஒவ்வொரு மாதமும், அந்தமான் தீவில் கூலி வேலை செய்யும் பொன்னனிடமிருந்து, பதினைந்து ரூபாய், தமிழகத்திலிருக்கும் அவன் மனைவி பொன்னிக்கு வந்து கொண்டிருந்தது. அந்தப் பணத்தைக்கொண்டு, கண்டவுடனே கவலை எல்லாம் போக்கி, உள்ளத்தில் களிப்பெய்தவைக்கும் அருமைக் குழந்தைகளின் வாழ்வுக்காக, குடும்பத்தை நடத்திவந்தாள் பொன்னி. வாழ்வில் திருநாள் கருநாளின்றி, நன்மை தீமைகளின்றி, கிடைத்த உணவைக்கொண்டு, கண்ணீரும் கவலையுமாய் வாழ்வு நடத்திவந்தாள். ஆயினும், நைந்து நைந்து வளர்ந்துகொண்டிருக்கும் தனதருமைக்கண்மணிகள், பொன்னியின் உள்ளத்தை மலரச் செய்து, இடையிடையே ஊக்கமளித்துக் கொண்டிருந்தன!

பணம் வரவேண்டிய நாள் பக்கத்தில் வந்துவிட்டது. மாலையில் தபால்காரன் வரும் பாதையை அடிக்கொருதரம் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தாள். காற்றிலே மிதக்கும் ஒரு சிறு தூசி அவள் இடது கண்ணில் விழுந்து உறுத்தச் செய்தது. கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள். வீதியில் காற்று வேகமுடன் சீறிற்று; தெருப் புழுதியையெல்லாம் வாரி வாரி இறைத்தது. சுழிக் காற்று, ஊர் முழுவதையும் புழுதிமயமாக்கியது! அப்போது மேலாக பாலை பங்கியது; மாமுகிற்கூட்டம் சந்திரனின் ஒளியை மறைத்துவிட்டது! அந்தக் கார் முகிற் கூட்டத்திலே, சிலசமயம் மின்னற்கொடிகளும் மின்னின! ஆனால் உடனே அவை மறைந்தும் விடும்.

தபால்காரன் தெருவில் வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் சந்தோஷப்பட்டாள்; விரைந்தோடி வந்தாள்; களிப்போடு கை ரேகையிட்டாள்; இரக்கத்தோடு பார்த்தான் தபால்காரன்.

“ஐயா, பணம்!” என்று ஆவலாகக் கேட்டாள்.

“அம்மா, அது தந்தி!” யென்றான் தபால்காரன்.

“ஆ..........!” அவள் குரல் தடுமாறியது.

“அந்தமான் தீவில், கூலி வேலை செய்யும் பொன்னு காலமாகி விட்டாரப்பா'” என்று கவரைப் பிரித்துக் கூறிவிட்டுக் நடந்துவிட்டான்.

வானகத்தில் ஓர் பேரிடியின் ஓசை கேட்டது! பொன்னியின் கண்களில் நீர் நிறைந்து பார்வை கலங்கித் தெரிந்தன! அவள் உள்ளம், நடுக்கடலில், சூறாவளிப் புயற்காற்றிற் சிக்கிய மரக்கலம் போல சுழன்றுகொண்டிருந்தது!

அன்னை தரையில் விழுந்ததைக் கண்ட இரு குழந்தைகளும், அலறிக்கொண்டு ஓடி வந்து, தாயின் மேல் புரண்டு புரண்டு அழுதன! கதறிக் கதறி அழுதன! யாருமே தேற்றுவாரில்லை! குழந்தைகளின் அழகிய கண்களிலிருந்து சரஞ்சரமாக வரும் கண்ணீர், பொன்னியின் தாமரை முகத்தை நனைத்தது! தரையில் கிடந்த பொன்னி விம்மும் பெருமூச்சோடு விழித்தாள்!

ஃ ஃ ஃ

அந்தமான் தீவிற்குக் கூலியாகச் சென்று அங்கு அனுபவிக்கும் தாங்கமுடியாத கொடுமைகளினால் அங்கேயே உயிர் நீத்த ஏழை நெசவாளி பொன்னனின் மனைவி பொன்னியையும் அவனருமைக் கண்மணிகளிருவரையும் காப்பாற்றுவது யார்? கடும்பசியோடிருக்கும் அவர்களின் வயிற்றுக்கு உணவளிப்பது யார்..? நீர் ஓடிக்கொண்டிருக்கும் நதிகளா? ஒடிந்து கிடக்கும் பட்ட மரங்களா? வாயைப் பிளந்து இருக்கும் பாழுங் கிணறுகளா? அல்லது ஒரு முழக் கயிறா? இவைகளில் எது? ●

புத்தக விமர்சனம்.



"மகிழ்ச்சி"

பொங்கல் மலர்.

விலை அணா 0-2-0

பக்கங்கள் 120.

ஆசிரியர்: நா சதானந்தம்.

விருதுநகர்.

அழகும், கருத்தும் நிறைந்த "ரவி"யின் ஓவியம் முகப்பில் மூவர்ண அட்டையாகத் தாங்கி, தமிழ் நாட்டு வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான நாரண—துரைக்கண்ணன் கி. வா. ஜெகந்நாதன், எர். எஸ். கமலா, எ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. சு. தங்கப்பழம், ஆகியோரின் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த— சிந்தனைக்கு விருந்தளிக்கும் கட்டுரைகள், கதைகளோடும்,

தமிழ் மொழிச் செல்வத்தின் "மாஸ்டர்"களான கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் "மகிழ்ச்சி" வாழ்த்தும், யோகி. சுத்தானந்த பாரதியின் 'பொங்க வேண்டும்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கடமையுணர்ச்சி பொங்கத் தூண்டும் கவிதையும் மலரைச் சிறப்பித்து ஜீவனுள்ளதாக்கியுள்ளன.

தவிர, மலரின் இடையிலே சினிமா வானில் சிறந்து நிற்கும் நட்சத்திரங்களின் புகைப் படங்களும், இயற்கைக் காட்சிகளின் படங்களும், "நகரத்துப் பெண்களின் பொழுது போக்கு" என்கின்ற தலைப்பில் பல வேடிக்கைகளை விவரிக்கும் படங்களும் இடம் பெற்று, மலர் நம்மை மகிழ்விக்கிறது.

அடுத்துவரும் மலர்களில் ஆசிரியர் அவர்கள், சிறு கதைகளை குறைத்துக்கொண்டு நாட்டிற்கும், மக்களுக்கும் பயன் விளைக்கும் விஞ்ஞானம், தொழில்துறை சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஒரு சில இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற ஆலோசனையைக் கூறி, ஆசிரியரின் சீரிய முயற்சியால் செழுமை நிறைந்து மலர்ந்துள்ள "மகிழ்ச்சி" மலரை வரவேற்கிறோம். — ஆசிரியர்.

மதுரை கலர் நூல் நெசவாளருக்குப் பிடித்தமானதல்ல!

கோவை நகருக்கு கலர் நூல் லைசென்சு தருவதாக கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டரின் வாக்குறுதி!

சென்னை கட்டுப்பாடு பொருள்களின் டைரக்டர் வி. வி. சுப்ரமணியர் ஐ. சி. எஸ் கோவைக்கு 12-1-52 தேதியன்று விஜயம் செய்திருந்தபோது, கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 9 பேர்கள் தூதுகோஷ்டியாகச்சென்று ஒரு யாதாஸ்து சமர்ப்பித்தனர்.

அந்த யாதாஸ்தில் கோரியிருந்த விஷயங்களாவது:—

கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டராக முன்பு இருந்த (காலஞ்சென்ற) விஸ்வநாத ஐயர் வாக்களித்திருந்தபடி கோவைக்கு மேலும் 100 நெ. நூல் பாரம் 5 மேல் அதிகமாக அலாட்மெண்ட் போடவேண்டுமென்றும், பிரதி மாதமும் 100 நெ. நூல் பற்றிய உற்பத்தி, வினியோக புள்ளிவிவரங்களை சங்கத்திற்கு அனுப்பிக் கொடுக்கவேண்டுமென்றும், குறிப்பிட்ட தேதிகளில் நூல் வினியோக உத்திரவுகளை போட்டு, அந்த நாளில் வினியோகம் செய்ய வேண்டுமென்றும், அப்படி குறிப்பிட்ட நாட்களில் வினியோகம் நடக்காதபோனால் அதற்கான—காரணங்கள் என்ன என ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், சங்கத்திற்கு 4-4-51ல் சீமை நூல் லைசென்சு கொடுக்கப்பட்டதில் இதுவரை யாதொரு பிரயோஜனமுமேற்படவில்லையாதலால் அதை உள்ளூர் 100 நெ. வெள்ளை நூல் லைசென்சாக மாற்றித்தர வேண்டுமென்றும் கோரப்பட்டிருந்தது.

மேலும் அந்த யாதாஸ்த்தில், இன்றுள்ள கலர் நூல் வினியோக ஏற்பாட்டால் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, வாளவாடி போன்ற தூரமான இடங்களுக்குப் போய் கோவை நெசவாளர்கள் 80 நெ. நூல் வாங்கவேண்டியிருப்பதால், சங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள நூல் லைசென்சிற்கே மதுரை சாயநூலும் அலாட்மெண்ட் போட வேண்டுமென்று கோருவதாகவும்,

மதுரை சாயக்கோட்டாக்காரர்கள் இப்பொழுது சாயம் தோய்த்து அனுப்பும் பல கலர்கள் நடைமுறைக்குப் பிடிக்காதவைகளாய் இருப்பதால் நம் சங்கத்தார் கோரும் கலர்களை மட்டுமே சாயம் போட்டு அனுப்பும்படி டைரக்டர் அவர்கள் உத்திரவு போட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

இக் கோரிக்கைகளைக் கேட்டுக் கொண்ட கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டர், மதுரை கலர் நூல் வினியோகம் செய்ய கோவை நகரத்தில் ஒரு வியாபாரிக்கு லைசென்சு கொடுப்பதாகவும், கோவை கைத்தறி நெசவு தொழிலாளர் சங்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள சீமை நூல் லைசென்சை உள்ளூர் நூல் லைசென்சாக மாற்றித்தருவதாகவும், மற்ற கோரிக்கைகள் சம்பந்தமாக கவனிப்பதாகவும் டைரக்டர் கூறியதாக மேற்படி சங்க காரியதரிசி சி. ராமராஜ் அறிவிக்கிறார். ●

மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
எழும்பூர் — மதராஸ்

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthannankulam Street, Coimbatore.